ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

कलये सततं करुणाजलधिं करुणाविषयं कमलाधिपतेः ।
कलिवैरिशठारिवचोरसिकं कवितार्किककेसरिसूरिगुरुम् ॥

892

892/4-57

JL
Q22ma2v/Ml41
152 16.9.
X10743

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	212
2. ஸ்ரீமச்சாரீரகஸுப்ரபாதம் [ஸ்ரீ. உப. வித்வான், சின்னமு சி. ர. ஸ்ரீநிவாஸபாட்ராசார்ய ஸ்வாமி திருக்குடந்தை.]	215
3. 43-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	219
4. ஸ்ரீஸந்நிதியில் நடக்கும் பகவந்நாமஸங்கீர்த்தனம் [ஸ்ரீ. உப. M. R. கஸ்தூரிரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம்.]	221
5. ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனும் ஸ்ரீமதழகியசிங்கரும் [ஸ்ரீ. உப. ஜ்யோதிர்பூஷண, ரஸிகசிகாமணி, பண்டிட், அன்பில் ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமி, மதராஸ்.]	222
6. அழகியமணவாளதாஸர் என்கிற "திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்" [ஸ்ரீ. உப, வித்வான் ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	224
7. என்னுடைய இன்னமுது [ஸ்ரீ. உப. அத்தி. நரஸிம்ஹாசார்யஸ்வாமி, சிரோமணி, அர்ச்சகம், ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி தேவஸ்தானம், திருவள்ளூர்.]	229
8. நித்யகர்மாநுஷ்டானங்கள் [ஸ்ரீ. உப. பனமுகை வீ. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஆராதகர், ஸ்ரீ அஹோபிலமடம்.]	231
9. செய்தி	236
10. ஸ்ரீஸந்நிதி குருபரம்பரை	

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ஹூ புரட்டாசி மீ { ஸஞ்சிகை 9

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

உலகில் பல்வேறு பாகங்களிலும் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகாரணமாக ஆங்காங்குள்ள மனிதர்களின் பழக்க வழக்கங்களில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. இம்மாதிரியான பழக்க வழக்கங்களில் பல, நமது ஸௌகர்யத்தையும், அபிப்ராயத்தையும் அநுஸரித்து நாமாக ஏற்படுத்திக்கொள்ளக்கூடியவைதான். ஆதலால்தான் ஒரே ஸமூஹத்தில் கூட மாறுபாடுடன் கூடிய பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. ஆயினும் இம்மாதிரி வேற்றுமையிலும், நம்மால் மாற்றியமைக்க முடியாத ஒற்றுமைகள் உண்டு. ஆப்ரிக்காவிலுள்ள ஒரு நீக்ரோ தன் வர்ணத்தையும், புலி தன் மேலுள்ள புள்ளிகளையும் மாற்றிக்கொள்ள முடியாதென்ற பழமொழியே இதற்குத் தகுந்த உதாரணமாகும்.

இந்தியர், மங்கோலியர், நீக்ரோ, ஐரோப்பியர் என்றெல்லாம் ஒரு குறிப்பிட்ட நபரைப் பார்த்தவுடன் கூறமுடிகிறதல்லவா. இதுதான் நம்முடைய சக்திக்குப் புறம்பான தர்மம். மற்றபடி நமது சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்வதில் நாம் தயங்குவதில்லை. ஆடையலங்காரங்களை மாற்றிக்கொள்ளலாம். அங்கஅடையாளங்களை மாற்றிக்கொள்ளமுடியாது. சூழ்நிலைக்குத் தக்கபடி பழக்க வழக்கங்களையும், ஆடையலங்காரங்களையும் மாற்றி யமைத்துக்கொள்ள இயலும் என்ற காரணத்தினால், நாம் அவசியம் மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என்ற நிர்பந்தம் உண்டா?

சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்துக்கு வட்டமேஜை மஹாநாட்டுக்குச் சென்ற காந்தி, 'கௌபீனத்துடன் காணப்படும் பக்கிரி' என்று அரசியல் தந்திரி சர்ச்சிலால் கூறப்பட்டவர், அதே உடையுடன்தான் ஸாம்ராஜ்ய சக்ரவர்த்தியையும், சக்ரவர்த்தினியையும், அவர்களுடைய மாளிகையின் மத்தியிலேயே ஸந்தித்து, ஸல்லாபித்து கௌரவிக்கப்படவில்லையா? மனோவலிமைதானே இதற்குக் காரணம்.

இன்றுகூட பர்மியர்களும், சீனதேசத்தவர்களும், மற்றும் உலகத்தில் உள்ள பல பாகங்களிலிருந்து வரும் பல ராஜீயவாதிகள், உலக மஹாநாடுகளில் தங்களுடைய தேசிய உடைகளுடன் தோன்றி கௌரவிக்கப்படவில்லையா? அவர்களுக்குள்ள தேசியப்பற்றுதானே இவைகளுக்குக் காரணம்.

இம்மாதிரியான தேசியப்பற்று நமது ஸமூஹத்திலுள்ள, சில பெரியோர்கள் எனக் கூறப்படுபவர்களுக்கு மட்டில் ஏன் புலப்படவில்லை.

திராவிட நாட்டு சுதந்திரத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறுமிவர்கள், எம்மாதிரி சுதந்திரத்தை மனத்திற்கொண்டுள்ளார்கள் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். ஒரு நாட்டில் உள்ள மலையையும், அருவியையுந்தானா இவர்கள் விரும்புகிறார்கள். மனிதர்களையும், அவர்கள் பண்பையும் இவர்கள் வெறுக்கிறார்களே? ஏன்?

ஒரு நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதென்பது, அதன் பண்பாடுகளைக் காப்பாற்றுவதல்லவா? பல்லாயிராண்டுகளாக நமது ஸமூஹம் உயர்ந்த பண்பாடுகளுடன் வாழ்ந்து வந்திருக்கிறது. குரூரமான முஹம்மதிய படையெடுப்புக்களையும் எதிர்த்து நிலைத்திருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது ஸுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு உட்பட்ட ஆங்கி

லேயர்களின் ஆதிக்யத்தினுல், அவர்களுடைய பண்பாடுகளைப் பார்த்து பழக்கப்படுத்திக் கொண்டது. ஸமூஹத்திலுள்ள தைர்யசாலி கள் இதற்கும் கலங்காமல் எதிர்த்து நின்று, தங்களுடைய புராதன பழக்கங்களையும், நற் செயல்களையும் பாதுகாந்து வந்திருக்கின்ற னர். அப்படியிருக்க திராவிடநாடு சுதந்திர மடைய வேண்டும் எனக் கூறும் பெரியவர்கள் ஆங்கிலேயப் பண்பாடுகளில் மூழ்கிக் கிடக்கும் ஒரு கூட்டத்தின் பலத்தை உபயோகப்படுத் திக்கொண்டு பல்லாயிராண்டுகளாக நிலைத்தி ருக்கும் நம் நாட்டுப் பண்பாடுகளை வேருடன் களைந்தெறிய முற்படுகிறுர்களே. இதைக்காட் டிலும் விந்தை யிருக்கமுடியுமா.

திராவிட நாடு ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனக் கூறும் இவர்கள் ஆங்கிலப்பண்பாடுகளுக் காகப் பாடுபடுகிறுர்களென்றுல் திராவிடநாடு என்பது இவர்களுடைய கருத்தில் எதைக் குறிக்கிறது என்பது விளங்காப் புதிராகவே இருக்கிறது.

'கூடு கட்டத்தெரியாது, கட்டின கூட்டைப் பிறிக்கத்தெரியும்' என்று கூறும் ஒரு இனத் தைப் பற்றி நாம் கதைகளில் படித்திருக்கி ருேம். நேரில் இவ்வினங்கள் நம்மிடம் பேச வோ, இவ்விதம் கூறவோ இயற்கை நியதியில் ஏற்படவில்லை. ஆதலால் நமக்கு இம்மாதிரி உண்மைகளை நிதர்சனமாக்க முற்படுபவர்களும் உண்டு என்றுதான் நாம் உணர்கிறேம்.

தமிழ்நாட்டின் சரித்திர ஏட்டில் பழையது எனக் கூறப்படும் சிலப்பதிகாரம் போன்ற காவ்யங்களில் விவரிக்கப்பட்டுள்ள பழக்க வழக் கங்களையும், தெய்வ நம்பிக்கைகளையும் ஒழித் துக் கட்டப் பாடுபடும் வர்க்கத்தினர் தமிழ் நாட்டுக்காகப் பாடுபடுபவர்களாகிறுர்கள். புரா தன பழக்க வழக்கங்களை ஒழிக்க வந்தார்கள் எனச் சிலர் எண்ணி வாளாவிருந்தனர். சிலர் மறைமுகமாக ஸந்தோஷித்தனர். இவர்களின் செயல்கள் இத்துடன் நின்றபாடில்லை. நவீன ஸமூஹத்தில் கௌரவிக்கப்படும் பெரியவர் களுக்கும் அவமானத்தைக் கொடுக்கக் கூடிய நிலையில் இவர்கள் ஈனச்செயல்களை அதிகரிக்க வாரம்பிக்கிறுர்கள்.

புராணங்களின் பிரதிகளை எரிப்பதிலும், கடவுளின் உருவப்படங்களைக் கொளுத்துவதி லும், ப்ரதிமைகளை உடைப்பதிலும் இவர் களுக்கு எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி கிடைக்கவில்லையாம். ஸமூஹநலனுக்குப் பாடு பட்டு வந்த போற்றத்தக்கவர்களின் உருவப் படங்களைக் கொளுத்தவோ, ப்ரதிமைகளை உடைக்கவோ திட்டமிட்டிருக்கிறுர்கள் என செய்தித்தாள்கள் மூலம் அறிகிறேம்.

பத்மாஸுரனுக்கு வேண்டிய வரன் கொடுத்த பின் பட்டபாடு பரமசிவனுக்குத் தெரியும். இந்த ஸம்பவந்தான் நமக்கு இது ஸமயம் ஜ்ஞாபகத்திற்கு வருகிறது.

'கடவுளின் ப்ரதிமைகளை உடைத்தது பெரிய பிழை யெனக் கூறுவதற்கில்லை. இம் மாதிரி ப்ரதிமைகள் ப்ரதிஷ்டை செய்யப்பட் டவைகள் அல்ல. ஸாதாரண பொம்மைகள் தான். ஆகவே கடவுள் நிந்தனையளவில் எடுத் துக்கொள்வதற்கில்லை' என்று கூறக்கூடிய பெரியவர்களும் நமக்கிடையே உண்டு. இதே நியாயத்தை யநுஸரித்தால் ஒரு நாட்டின் அரசனின் உருவப்படத்தை பொதுஸ்தலத் தில் நிந்தித்த ஒருவனை, அந்த உருவப்படத் தில் ஜீவன் இல்லை, ஸாதாரண சித்ரந்தான் என்று கூறும் அரசாங்கமும் இருக்கவேண் டுமே? இப்படியும் நடக்குமா?

இம்மாதிரி தீயச்செயல்களுக்கு பொதுமக்க ளிடையே பரபரப்பு அதிகம் காணப்பட வில்லை. ஆதலால் கடுமையான நடவடிக்கை கள் எடுக்கப்படவில்லை எனக் கூறலாம். இப் படிக் கூறினுல் இவர்களுக்கு நாம் கூறும் பதில் நடைமுறையில் ஒரு உதாரணத்தில் ஸாத்ய மாகிறது.

ஸமீபத்தில் நமது ராஜ்யத்தில் அமுலுக்கு வந்த நியாயவாரசட்டத்தை யநுஸரித்து, ஒரு நிலச்சுவான்தாரும், சாகுபடியாளரும், அந்த நிலத்தின் நியாயமான விளைவில் 40 பங்கு 60 பங்கு என்ற நியதியில் பிரித்தெடுத்துக் கொள்ளவேண்டும். ஆனுல் பல விடங்களில் சாகுபடிதாரர்கள் பக்கத்து நிலங்களைப்போல் சரிவர சாகுபடி செய்யாமல் அலக்ஷியமாகவே

இருந்துவிட்டு தத்காலம் உள்ள விளைச்சலில் தாங்கள் கூறும் நிலையில் அறுவடை செய்து நிலச்சுவான்தாரர்களுக்குப் பங்கு கொடுப்பதாகக் கூறியும், இதற்கு ஸம்மதிக்காத நிலச்சுவான்தாரர்களை உபேக்ஷித்து சாகுபடிதாரர்கள் நெல்லை அப்புறப்படுத்தவும் முயற்சிக்க, போலீஸுக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், அந்த அதிகாரிகள், 'இந்த விஷயங்கள் சிவில் ஸம்பந்தமானவை, நாங்கள் தலையிடுவதற்கு இல்லை. அமைதிக்கு பங்கம் நேர்ந்தால்தான் நாங்கள் தலையிடமுடியும்' என்று கூறினர்கள். ஆகவே ஸௌஜன்யமுறையில் தீராதபடியால் நிலச்சுவான்தார்களும், இம்மாதிரி நஷ்டம் ஏற்படக் கூடாதென்றால், அமைதிபங்கத்தை உண்டாக்கவேண்டும் என்று மனத்திற்கொள்ளும்படிதானு கார்யங்களை நடத்தித்தரவேண்டும். எவ்வளவு வருந்தத்தக்க நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறதென்று நாம் உணரவேண்டாமா.

இவ்விதம் ஸமூஹத்தில் பரஸ்பரம் த்வேஷ மனப்பான்மையே வளர்ந்துகொண்டேவாராமல் தடுக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்குமுண்டு.

தமிழ் நாடு இதேமாதிரிதான் இருக்கும் என்று நம்மில் ஒவ்வொருவரும் உணர ஆரம்பித்தால், தமிழ் நாட்டுக் கோரிக்கையின் ஆரம்பமே இப்படி இருக்க, மேற்படி நாட்டின் அமைப்பில் பிற்காலத்தில் என்ன என்ன ஏற்படுமோ என்று பலர் பயப்படுவதில் அதிகமாகவே நியாயம் இருக்கிறதல்லவா?

நம்மில் ஒவ்வொருவரும் இனியாவது நமது உட்கருத்தை வெளிக்குக் காட்டவேண்டும் என்று உணரவேண்டும். உபேக்ஷிப்பதால் நமக்கு உணர்ச்சியே இல்லை என்றல்லவோ சிலர், அதிலும் முக்யமானவர்களில் சிலர் ஊகிக்கிறார்கள். இதனால் நமக்கல்லவோ கெடுதி ஸம்பவிக்கிறது. ஆகவே ஒவ்வொருவரும் நியாயமற்ற செய்கைகளை வன்மையாகக் கண்டித்து அரசாங்கத்துக்கு ஊக்கமும், பலமும் அளிக்கவேண்டியது மிகவும் அவசியம்.

ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமத்தொடர்ச்சி:—

ஆவணி மீ 19உ ஏகாதசியன்று பம்பாய் சடகோபாசாரியர் பெரியபெருமாளுக்குத் திருமஞ்சனம் பண்ணிவைத்தார். 24உ உத்தானதினத்தன்று காலையில் அபிகமனகோஷ்டிக்குப் பிறகு திருமுடி விலக்கமாகி கங்கையில் நீராட்டம் அநுஷ்டானங்கள் ஆகி பெருமாள் ஸந்நிதிக்கெழுந்தருளி ம்ருத்துத்வாஸநமாகி இஜ்யை ஆராதனம் நடந்தது. தங்கத்தில புதியதாக திருக்குடந்தையிலிருந்து பண்ணி அன்று வந்த தீபஹாரத்தி தட்டால் தீபஹாரத்தி கண்டருளினர். இஜ்யையில் சாற்றுமுறை கோஷ்டியானதும் வழக்கப்படி திருவுள்ளூர், புள்ளபூதங்குடி, ஆதனூர் முதலிய திவ்யதேசங்களிலிருந்து வந்த மரியாதைகள் நடந்து கோஷ்டி ததியாராதனம் நடந்தது. உத்தானத்தை உத்தேசித்தும் பட்டணம் கடலூர் முதலிய இடங்களிலிருந்து K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் முதலியவர்கள் வந்திருந்தார்கள். ஹ்ருஷீகேசத்தில் எழுந்தருளியிருந்த அந்த இரண்டு மாதங்களில் ஸௌகர்யமுள்ளவர்கள் பம்பாய் பட்டணம் தஞ்சாவூர் டெல்லி ஹைதராபாத் மைசூர் முதலிய இடங்களிலிருந்து அநேகம் பேர்களும், மந்திரி, மெம்பர்கள் முதலானவர்களும் அவ்வப்போது வந்து பெருமாளையும் ஸ்ரீஅழகியசிங்கரையும் தெண்டம் ஸமர்ப்பித்துவிட்டுப்போனார்கள். 24உ ராத்திரி புறப்பட்டு $3\frac{1}{2}$ மைல் தூரமுள்ள ராமநகரைச் சேர்ந்த 'ஆத்மவிஜ்ஞான் பவ'னுக்கு எழுந்தருளினர். போகிகள் சிலர் வர தாமதமேற்பட்டபடியால் அன்றும் மறுநாளும் கங்கைக்கரையிலுள்ள அந்த இடத்திலேயே எழுந்தருளியிருந்தார். 26உ புதன்கிழமை ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள ஹரித்வாரத்திலுள்ள ரிஷிகுலத்திற்கெழுந்தருளினர். அன்று ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள ரூர்கி ஸமீபத்திலுள்ள தனேரி எழுந்தருளினர். ஸெப்டம்பர் மாதக்கடைசியில் டில்லிமாநகர் எழுந்தருளக்கூடும். (தொடரும்)

—:0:—

ஸ்ரீ:

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன்

(37-வது பட்டம்) அருளிச்செய்த

ஸ்ரீமச் சாரீரக ஸுப்ரபாதம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷ ஸங்க்ரஹம்:— ஆதித்ய மண்டலத்திலும் கண்ணிலும் இருக்கும் புருஷன் ஸூர்யன் முதலான சப்தங்களால் சொல்லப்படுமவன்தானு? அல்லது பரமாத்மாவா? என்று ஸம்சயம். பூர்வபக்ஷி, மிகுந்த புண்ணியம் செய்த ஸூர்யன் என்ற ஜீவன்தான் என்கிறுன். ஏனெனில், இப்புருஷனுக்கு சரீரமுண்டென்று சொல்லியிருப்பதால். கர்மஸம்பந்தத்தால்தான் சரீரஸம்பந்தம் வரும். கர்மஸம்பந்தமுடையவன் ஜீவன். கர்மஸம்பந்தமே யில்லாத பரமாத்மாவுக்கு கண்கள், நகங்கள், மயிர் இவைகளுள்ளதாக இங்குச் சொல்லப்பட்ட சரீரஸம்பந்தம் ஒருக்காலும் பொருந்தாது.

கேள்வி:- கீழ் அதிகரணத்தில் 'சாரீர ஆத்மா' என்று சொல்லியிருப்பதால் சரீரஸம்பந்தத்தைக்கொண்டு ஆனந்தமயன் ஜீவன் என்று சொன்னதைத் தூஷித்தாய்விட்டதே; சரீரமுள்ளவனுயிருப்பதைக்கொண்டு மறுபடியும் இங்கு பூர்வபக்ஷம் சொல்லலாமா?

விடை:— அங்கு கூறிய சரீரம் வேறு. அங்கரஸமயமான உடம்பு, ப்ராணன், மனஸ், ஜீவன் ஆகியவைகள். அவைகளில் கண்கள் முதலான அவயவங்களில்லை. இங்கே சொன்ன சரீரத்தில் கண்கள் நகம் முதலான அவயவங்களிருக்கின்றன, அங்கு சொன்ன சரீரங்களுக்கும் பரமாத்மாவுக்கும் ஸம்பந்தம் சேஷ சேஷிபாவம் அல்லது நியாம்ய நியாமக பாவம். (நியாம்யம் - ஏவத்தக்கது; நியாமகன் — ஏவுகிறவன்; இவைகளின் ஸம்பந்தம் நியாம்ய நியாமகபாவம். சேஷம்— ஸொத்து; சேஷி— ஸொத்துக்காரன்; இவர்களுடைய ஸம்பந்தம் சேஷ சேஷிபாவம்.) இங்கு சொன்ன சரீரத்துக்கும் ஆதித்யமண்டல புருஷனுக்கும் ஸம்பந்தம், உபகரண உபகரணிபாவம். (உபகரணம் — ஒரு கார்யத்தைச் செய்வதற்கு வேண்டிய கருவி; அதையுடையவன் உபகரணி; இவர்களின் ஸம்பந்தம் உபகரண உபகரணிபாவம்.) ஆகவே சரீரஸம்பந்தம் சொல்லியிருப்பதால் புண்யவிசேஷத்தால் மஹிமையைப் பெற்ற ஸூர்யன் முதலான ஜீவனே ஆதித்யமண்டல புருஷன். அவனே ஜகத்காரணமாக ஆகலாம்; ஜீவனைவிட வேறுன பரமாத்மா என்ற ஒருவன் இல்லை என்று பூர்வபக்ஷம்.

ஸித்தாந்த ஸங்க்ரஹம்:— ஆதித்யமண்டலத்திலும் கண்ணிலுமிருக்கும் புருஷன் ஸூர்யாதி ஜீவர்களைக்காட்டிலும் வேறுன பரமாத்மாவே. பரமாத்மாவுக்கு அஸாதாரணமான அபஹதபாப்மத்வம் முதலான தர்மங்கள் கூறப்பட்டிருக்கின்றன. 'स एष सर्वेभ्यः पाप्मभ्यः' என்பதால் அபஹதபாப்மத்வம் கூறப்பட்டிருக்கிறது. அபஹதபாப்மத்வமாவது:— கர்மத்துக்கு உட்பட்டவனென்கிற வாஸனையே யில்லாத தன்மை. இங்கு பாபசப்தத்தால் புண்யமும் சொல்லப்படுகிறது.

'स एष ये चामुष्मात्परांचो लोकास्तेषां चेष्टे देवकामानां च' (சா 1-6-8) **'स एष ये च एतस्मा दर्वांचो लोकास्तेषां च ईष्टे मनुष्यकामानां च'** (சா 1-7-6) என்பதால் சொல்லப்பட்ட லோக காமேசத்வம் என்கிற தர்மமும் பரமாத்மாவுக்கு அஸாதாரண தர்மம். (ஆதித்யமண்டல வர்த்தியான ஹிரண்மயபுருஷன், ஆதித்ய மண்டலத்துக்கு மேலிருக்கும் உலகங்களையும், தேவதைகளுடைய காமங்களையும் (போக்யம், போகோபகரணம், போகஸ்தானம் என்பவை களையும்) நியமிக்கிறவன். கண்ணிலிருக்கும் ஹிரண்மயபுருஷன் கீழுள்ள உலகங்களையும் மநுஷ்யர்களின் காமங்களையும் நியமிக்கிறவன்.

அபஹதபாப்மத்வம், லோககாமேசத்வம் என்ற இரண்டும் ஜீவனுக்குப் பொருந் தாது. சுத்த ஜீவனுக்கு அபஹதபாப்மத்வம் பரமாத்மாவின் அருளால் வருவதால் நிருபா திகமன்று. நிருபாதிகமான அபஹதபாப்மத்வம் பரமாத்மாவுக்கே அஸாதாரணமென்பது தஹரவித்யை முதலியவற்றில் சொல்லியிருக்கிறது.

பரமாத்மாவுக்கும் சரீரமுண்டு. ஆனால் அது கர்மத்தால் வந்ததன்று; ஸத்யஸங் கல்பனை அவன் தன் இச்சையால் எடுத்துக்கொள்வது. **'अजायमानो बहुधा विजायते' 'संभवामि आत्ममायया'** என்ற ச்ருதி ஸ்ம்ருதிகளால் இவ்வர்த்தம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கி றது. பரமாத்மாவின் திருமேனி அப்ராக்ருதமானது; ப்ராக்ருதமன்று. ச்லோகத்தில் 'திவ்யரூப:' என்று அருளிச்செய்திருப்பது இந்த அபிப்ராயத்தைக் கொண்டே. **'य आदित्ये तिष्ठन् …………… यस्यादित्यश्शरीरम्'** என்ற அந்தர்யாமிப்ராஹ்மணம், ஸூர் யனைப் பரமாத்மாவுக்குச் சரீரம் என்று கூறுகிறது. சரீரம் வேறு; சரீரி வேறு. ஆக, ஆதித்யமண்டலத்திலும், கண்ணிலுமிருக்கும் புருஷன் ஜீவனைவிட வேறான பரமாத்மாவே.

आकाशात्सर्वभूतान्यजनिषत पुराऽऽकाशमेवापियन्ति
ज्यायानाकाश एभ्यः परमयनमपि ह्येष आकाश एव ।
इत्थं देदीप्यमानाकृतिरखिलजगत्कारणं मोक्षदाता
प्राप्यश्चेत्यर्थवेदे सुखशयित! समुत्तिष्ठ सुष्ठु प्रभातम् ॥ ௫

ஆகாசாத் ஸர்வபூதாந்யஜநிஷத புராऽऽகாசமேவாபியந்தி
ஜ்யாயாநாகாச ஏப்ய: பரமயநமபி ஹ்யேஷ ஆகாச ஏவ।
இத்தம் தேதீப்யமாநாக்ருதிரகிலஜகத்காரணம் மோக்ஷதாதா
ப்ராப்யச்சேத்யர்த்தவேதே ஸுகசயித!ஸமுத்திஷ்ட ஸுஷ்டு ப்ரபாதம்

(ப-ரை) புரா — முன்பு, (ஸ்ருஷ்டிகாலத்தில்) ஸர்வபூதாநி — சேதநாசேதநாத்மக மான ஸர்வ ப்ரபஞ்சங்களும், ஆகாசாத் — ஆகாசத்தினிடமிருந்து, அஜநிஷத - உண்டா யின, ஆகாசே ஏவ அபியந்தி— ஆகாசத்திலேயே லயமடைகின்றன, ஏப்ய:— இந்தப் பூதங் களைக் காட்டிலும், ஆகாச: — ஆகாசம், ஜ்யாயாந் — மிகவும் உயர்ந்தது. ஏஷ: ஆகாச: ஏவ ஹி— இந்த ஆகாசமே, பரம் அயநம் அபி— பரமப்ராப்யமுமாயிருக்கிறது. இத்தம்— இவ் விதம், தேதீப்யமாந ஆக்ருதி:- மிகவும் ப்ரகாசிக்கிற ஸ்வரூபத்தை யுடையவனும், அகில ஜகத்காரணம் - எல்லா ஜகத்துக்கும் எல்லாவித காரணமாயிருக்கிறவனும், மோக்ஷதாதா—

மோக்ஷத்தைக்கொடுப்பவனும், ப்ராப்ய: ச- பரமப்ராப்யனுமாய் இருக்கிறான், இதி அர்த்த வேதே- என்னும் பொருளைத் தெரிவிக்கும் வேதத்தில், (ஸ்வயம் ப்ரகாசமான ஸ்வரூபம், மிக ஜ்வலிக்கும் திருமேனி இவையுடையவன், அகிலஜகத்காரணம், மோக்ஷத்தை யளிப்ப வன், பரமப்ராப்யன் என்னும் அர்த்தத்தைத் தெரிவிக்கக்கூடிய 'ஆகாசத்திணிடமிருந்து ஸர்வபூதங்களுமுண்டாகி அதிலேயே லயமடைகின்றன. அந்த ஆகாசமே எல்லாவற்றை யும் விட உயர்ந்தது, அதுவே பராயணம்' என்ற சாந்தோக்ய ச்ருதியில்) ஸுகசயித- ஸுக மாகக் கண்வளர்ந்தருளும் ஹஸ்திசனே! ஸுஷ்டு ப்ரபாத:- நன்கு பொழுது விடிந்தது, ஸமுத்திஷ்ட- திருப்பள்ளியெழுந்தருளாய்.

இந்த ச்லோகம் ஆகாசாதிகரணத்தை விஷயமாகக்கொண்டது. இதில் முதலிரண்டு அடிகள் ச்ருதியின் அநுவாதம். பின் இரண்டடிகள் அந்த ச்ருதியின் பொருளை ஸித் தாந்தரீதியாகக் கூறுகின்றன.

இங்கு 'अस्य लोकस्य का गतिरिति। आकाश इति होवाच। सर्वाणि ह वा इमानि भूतानि आकाशादेव समुत्पद्यन्ते। आकाशं प्रत्यस्तं यन्ति। आकाशो हि एवैभ्यो ज्यायान् आकाशः परायणम्' (சா 1-9-1) என்ற வாக்யங்கள் அநுஸந்திக்கத்தக்கன.

இங்கு தேதீப்யமாநாக்ருதி: என்பது ஆகாசபதத்தின் பொருள். ஆ ஸமந்தாத் காசதே — எங்கும் ப்ரகாசிக்கிறது; அன்றிக்கே ப்ரகாசயதி - எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்கிறது என்ற பொருளைக்கொண்டு ஆகாசம் என்ற சொல் ப்ரஹ்மத்தைச் சொல்லும். ஆக்ருதி என்பதற்கு ஸ்வரூபமென்றும், திருமேனி என்றும் பொருள் கூறலாம். ப்ரஹ்ம ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாசம். மிகவும் ப்ரகாசிக்கும் திருமேனியுடையது ப்ரஹ்மம் என்று பொருள்.

மோக்ஷதாதா என்பது ஜ்யாயாந் என்பதின் தாத்பர்யார்த்தம். ஜ்யாயஸ்த்வமாவது ஸர்வகல்யாணகுணங்களால் வந்த நிரதிசயமான மேன்மை. இது ப்ரஹ்மத்தைத்தவிர்த்து மற்றொன்றுக்குமில்லாமல் ப்ரஹ்மத்துக்கே ஒரு காரணமுமின்றி ஏற்பட்டது. இப்படி ஸகலகல்யாணகுணபரிபூர்ணமான ப்ரஹ்மமே மோக்ஷத்தை யளிக்கவல்லது என்றபடி.

ப்ராப்ய: என்பது பராயணம் என்பதின் பொருள். சேதநர்களுக்கு பரமப்ராப்ய மாயிருக்கிறது என்றபடி.

இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷ ஸங்க்ரஹம்:— சாந்தோக்யத்தில் 'ஆகாச இதி ஹோவாச' என்ற வாக்யத்தில் சொல்லப்பட்ட ஆகாச என்ற பதம் பஞ்சபூதங்களுள் ஒன் றான ப்ரஸித்தமான ஆகாசத்தைச் சொல்லுகிறது. உலகில் இவ்விதமே வ்யுத்பத்தி காணப்படுகிறது. சப்தத்தாலேயே அறியவேண்டிய பொருளில் எந்த பொருள் லோக வ்யுத்பத்தியால் முதலில் தோன்றுகிறதோ, அந்த பொருளையே எடுத்துக்கொள்ள வேண்டு மென்பது ந்யாயம். பின்னும் 'यतो वा इमानि भूतानि जायन्ते' என்று பொதுவாகச்சொன்ன காரணவஸ்துவை 'सर्वाणि ह वा इमानि भूतानि आकाशादेव समुत्पद्यन्ते' என்று விசேஷித்து ஆகாசம் என்று இங்கு சொல்லியிருக்கிறது. ஆதலால் ஜகத்காரணமான வஸ்து பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாசமே. ஸத் முதலான பொதுவான சப்தங்களும் விசேஷமான

ஆகாசத்தையே சொல்லுகின்றன. எங்கும் வ்யாபித்துள்ளது என்ற பொருளைக் கொடுக்கும் ஆத்மசப்தமும் ஆகாசத்தில் மிகவும் பொருந்தும்.

கேள்வி:— 'ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத:' என்று ஆகாசம் ஆத்மாவினிடமிருந்து உண்டாயிற்று என்று சொல்லியிருக்கிறதே, அது எப்படி நிகிலஜகத்காரணமாகுமெனில்;

விடை:— வாயு முதலான எல்லா பூதங்களுக்கும் ஸூக்ஷ்மாவஸ்தை, ஸ்தூலாவஸ்தை என்று இரண்டு அவஸ்தைகள் உண்டு. ஸூக்ஷ்மாவஸ்தை கொண்டது காரணம், ஸ்தூலாவஸ்தை கொண்டது கார்யம். ஸூக்ஷ்மமான தன்னிடமிருந்து ஸ்தூலாவஸ்தமான ஆகாசமுண்டாயிற்று என்று 'ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத:' என்றதற்குப் பொருள். அதனால் ஆகாசம் காரணம் என்பதற்கு விரோதமில்லை. ஆதலால் ப்ரஸித்தாகாசமே ஜகத்காரணம் என்று பூர்வபக்ஷம்.

ஸித்தாந்த ஸங்க்ரஹம்:— ஆகாசசப்தத்தால் சொல்லப்பட்டது ப்ரஸித்தாகாசத்தைவிட வேறான பரமாத்மாதான். பரமாத்மாவுக்கே உள்ள லிங்கங்கள் (அடையாளங்கள்) இங்கு காணப்படுகின்றன. லிங்கமென்பது வேறு ப்ரமாணத்தால் ஒரு வஸ்துவிலிருப்பதாகக் காட்டப்படும் அடையாளம். இங்கு மூன்று லிங்கங்கள் இருக்கின்றன. அவை யாவன:- 1. நிகிலஜகத்காரணத்வம், 2. கல்யாணகுணங்களால் எல்லாவற்றையும்விட மேலாயிருப்பது, 3. பரமப்ராப்யமாயிருப்பது என்பன. ஜகத்காரணமான தன்மை மற்ற காரணவாக்யங்களில் பரமாத்மாவினிடமிருப்பதாகக் காட்டப்படுகிறது. அதை 'ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ஆகாசாதேவ ஸமுத்பத்யந்தே' என்ற வாக்யம் அநுவாதம் பண்ணி, ஆகாசம் என்று சொல்லப்பட்டதில் அந்த ஜகத்காரணத்வமிருப்பதாகச் சொல்லுகிறது. விஷயவாக்யத்திலுள்ள 'பூதாநி' என்ற சொல், ஆகாசத்தை விட்டுவிட்டு வாயு முதலான மற்ற பூதங்களை மாத்ரம் சொல்லவில்லை. ஏனெனில், 'ஸர்வாணி' என்ற சொல்லின் பொருளை ஸங்கோசம் பண்ண (குறைக்க) ந்யாயமில்லை. ஸர்வாணி பூதாநி என்பதற்கு ஸமஸ்த சேதநாசேதந ப்ரபஞ்சம் என்று பொருள். சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சத்துக்குக் காரணமாயிருக்கை ப்ரஸித்தாகாசத்துக்கு ஒருபோதும் வாராது. இந்த அபிப்ராயத்தைக்கொண்டுதான் ச்லோகத்தில் 'அகிலஜகத்காரணம்' என்று அருளிச்செய்திருக்கிறது. ஜகத்துக்கு அகிலமான காரணமாயும் (உபாதாநகாரணம், நிமித்தகாரணம்) இருக்கிறான் பரமாத்மா என்றும் சொல்லலாம்.

'ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத:' என்பதற்கு பூர்வபக்ஷி சொன்ன பொருள் ஸமஞ்ஜஸம் அன்று. ஆத்மா வென்பது ஒன்றுக்குள் ப்ரவேசித்து அதை நியமனம் பண்ணுவது. ஆகாசம் அசேதநமாகையால் ஒன்றை நியமிக்க சக்தியற்றது. ஆத்மா என்ற சொல் சிலவிடங்களில் அசேதநப் பொருளிலும் ப்ரயோகிப்பதுண்டு. அது ஆத்மசப்தத்தின் முக்யப்பொருளன்று. ஆத்மசப்தத்தின் பொருளில், உள்புகுவது, நியமிப்பது என்று இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு அம்சங்களும் எங்குப் பொருந்தியிருக்கின்றனவோ, அதுதான் முக்யப்பொருள். ஆகாசத்துக்குப் 'புகுவது' என்ற ஒரு அம்சமேயிருக்கிறது. ஓர் அம்சத்தை விட்டுப் பொருள் சொல்வது லக்ஷணையாகும். பின்னும் ஆத்மா என்ற சொல் சரீரப்ரதிஸம்பந்தியான ஆத்மாவினிடமே பெரும்பாலும் ப்ரயோகிக்கப்படுவதைக் காண்கிறோம்.

(தொடரும்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(16-வது ஸம்புடம் 7-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஆனிமீ 27வ ஸங்கல்பதினத்தன்று வழக்கப்படி ராத்திரி கண்ணனுக்கு டோலை உத்ஸவம் நடந்தது. ஆந்திராச்ரமத்தைக் கட்டினவராயும் அதன் நிர்வாஹகராயும் அதிலேயே வஸித்து வருபவருமான ஸச்சிதானந்தஸரஸ்வதி என்பவர் டோலோத்ஸவம் தன் உபயமாயிருக்கவேணுமென்று ஸம்பாவனை செய்தார். ஆந்திரதேசத்திலிருந்து வந்திருந்த மத்வதம்பதிகள் பக்தி பாடல்களை தம்புராவுடன் ச்ராவ்யமாகப் பாடினார்கள். பிறகு கோஷ்டிக்கு அக்ஷதை சந்தன தாம்பூலம் விநியோகிக்கப்பட்டது.

சச்சிதானந்தஸரஸ்வதி அவருடைய ஆந்திராச்ரமத்தில் பெருமாள் முதலில் இரண்டு நாள் தங்கிவிட்டு பத்ரிகாச்ரமம் எழுந்தருளின பிறகு மறுபடியும் இங்கேயே எழுந்தருளியிருக்குப்படியிருக்குமா? சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் இங்கேயே நடக்கக் கூடுமா? என்று தமேகமனோரதராய் இருந்துவந்தார் என்ற விஷயம், பெருமாளும் அப்படியே ஆந்திராச்ரமத்திற்கே எழுந்தருளி ஸங்கல்பமும் அங்கேயே நடந்துவருவதிலிருந்து நன்றாய் தெரிகிறது. பக்தர்களின் உண்மையான மனோநிலைமையை ஸர்வேச்வரன் அல்லது யாரால் அறிய முடியும்? அவர் தினந்தோறும் தவறாமல் வந்து பெருமாளையும், ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸாஷ்டாங்கமாக ப்ரணாமம் செய்யும் நிலைமையைப் பார்த்தவர்கள் அவருக்குப் பெருமாளிடத்திலும் ஸ்ரீ அழகியசிங்கரிடத்திலும் பக்தி எப்படி வ்ருத்தி அடைந்து வருகிறதென்பதை நன்றாக உணர்ந்து வந்தார்கள்.

ஸ்ரீபாஷ்யம் சாற்றுமுறையானபிறகு ஆரம்பிக்கப்பட்ட வேதார்த்தஸங்க்ரஹமும் முடிந்து இப்போது ந்யாயபரிசுத்தி ஆரம்பிக்கப்பட்டு அநுமாநாத்யாயம் ஸாயங்காலத்திலும், காலைவேளையில் பகவத்விஷயம் ஈடு ஒன்பதாம் பத்தும் காலக்ஷேபம் நடந்துவருகிறது.

ஆடிமீ 15வ திருவாடிப்பூரம் ஸ்ரீ ஆண்டாளுக்குத் திருமஞ்சனமும் நடந்து 26-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் (ஆஹ்நிகம் அருளிச்செய்தவர்) திருநக்ஷத்திரமுமானதால் நாச்சியார் திருமொழியும் ஸேவிக்கப்பட்டு கோயில் திருவாய்மொழி முதலியதின் ஸேவை சாற்றுமுறையும், ஸம்பாவனை ஸ்ரீபாததீர்த்தகோஷ்டிகளும் நடந்தன. 18வ காவேரி பதினெட்டாம் பெருக்கை உத்தேசித்து பெருமாள் விசேஷத் தளிகைகள் கண்டருளினார். 19வ ஸ்வாதி அன்று (ஜ்யேஷ்டாபிஷேகம்) எல்லாப் பெருமாளுக்கும் கங்காதீர்த்தத்தால் விசேஷத் திருமஞ்சனம் நடந்தது. விசேஷத் தளிகைளும் கண்டருளினார். அன்று 42 பட்டம் வரையிலுள்ள பாதுகைகளையும் தனித்தனியாக எழுந்தருளப்பண்ணி கங்காதீர்த்தத்தால் திருமஞ்சனம் நடந்தது. அன்று 25-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரமதிற்காக ஸேவை சாற்றுமுறை ஸம்பாவனை ஸ்ரீபாததீர்த்தம் கோஷ்டி விநியோகங்களும் நடந்தன. 25வ அன்று ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்திரத்தன்று மாலோல வித்வத்ஸபை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீஸந்நிதி குருபரம்பரையை ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் வரை அவருடையவும், ஸ்ரீஸந்நிதியினுடையவும், பெருமாளுடையவும் மாஹாத்ம்யங்களுடன் ஸங்க்ரஹமாக அநுஸந்தித்து உபக்ரமித்தாயிற்று.

உபாகர்ம தினத்தன்று தினந்தோறும் மாத்யாஹ்நிக ஸ்நாநத்திற்கு கங்கைக்கு எழுந்தருளுகிறமாதிரி அன்று எழுந்தருளும்போது கைங்கர்யபரர்கள் முதலிய எல்லோரும் வந்து கங்கைக் கரையிலேயே ஸங்கல்பம் செய்து கொண்டு தீர்த்தமாடி யஜ்ஞோபவீதம் முத

லியதுகளை தரித்துக்கொண்டு தர்ப்பித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் அங்கேயே அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டபிறகு யதிராஜ ஸப்ததி ஸ்வஸ்திவாசனபாராயணங்களுடன் கோஷ்டியாக பெருமாள் ஸந்நிதிக்கு வாத்ய கோஷங்களோடு எழுந்தருளி இஜ்யை மங்கள ஹாரத்தியாகி கோஷ்டியானதும் ச்ராவண ஹோமம் நடந்து அத்யயநாரம்பம் நடந்து ததியாராதனையும் மறுநாள் காயத்ரீஜபமும் செய்தார்கள். கங்கைக் கரையில் பெருமாள் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் உபாகர்மாவும், காயத்ரீஜபமும் நடக்கும்படி நேர்ந்தது தங்களுடைய பெரிய பாக்யமென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் பரிபூர்ணாநுக்ரஹத்தால்தான் இது தங்களுக்கு நேர்ந்தது என்றும் விஜ்ஞாபித்தார்கள். ஸமாசாரப் பத்ரிகைகளில் தெரிவித்திருந்தபடி பல வித்வான்கள் ஸ்ரீபாஷ்யவிஷயங்கள் எழுதியனுப்பியிருக்கிறார்கள். முதல் மூன்று நாளும் ஸர்வத்ர ப்ரஸித்யதிகரணம், பராதிகரணம், ஆராதகர்பனமை ஸ்ரீநரஸிம்ஹாசாரியரும் ஆராதகர்தையார் ஸ்ரீநிவாஸாசாரியரும் சொன்னார்கள்.

ஆராதகர்கள் இரண்டு பேரும் விஷயம் சொன்னபிறகு ஸ்ரீ. உப. சொக்கனூர் வெங்கிடரங்காசாரியர் ஸ்ரீ.உப ஸ்ரீகார்யபஜோ ரங்காசாரியர், ஸ்ரீ உப. முக்கூர், ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ. சேஷாத்ரி முதலியவர்கள் முடிந்தவரையில் பாஷ்யத்தையும் அவர்களும் பாராமல் சொல்லி (ஒப்பித்து) விஷயங்களும் சொன்னார்கள். ஸமாசாரப் பத்திரிகைகளில் தெரிவித்திருந்ததை அனுஸரித்து 31 பேர்கள் விஷயங்களை எழுதியனுப்பியிருந்தார்கள். நான்கு பக்கத்திற்குக் குறையாமல் எழுதியனுப்பவேண்டுமென்பதை நான்கு பக்கத்திற்கு மேல் போகக் கூடாது என்று அர்த்தம் பண்ணிக்கொண்டு இன்னும் விஷயங்கள் எழுதவேண்டியிருந்தும் நான்கு பக்கத்தோடு நிறுத்திக்கொண்டேன் என்றுகூட சிலர் எழுதியிருந்தார்கள். அவர்கள் எழுதின விஷயங்களும் பரிசீலிக்கப்பட்டது. இனிமேல் ஸதஸ்ஸுக்கு நேரே வந்து பத்து நாளும் இருந்து போகக்கூடிய ஸௌகர்யமில்லாத வித்வான்கள் இந்தமாதிரி விஷயங்களை (அதாவது அதிகரணார்த்தங்களையோ அதற்கு மேல்பட்டு வாத ப்ரதிவாதரூபமாகவோ விஷயங்களை) எழுதியனுப்புவது உசிதமாயிருக்கிறதென்றும் அதிலிருந்து அவர்களுடைய எழுதும் ஸாமர்த்யமும்விஷயவிசாரணஸாமர்த்யமுநன்றாகத்தெரிகிறது என்றும் இதுவும் ஸ்ரீபாஷ்யபரிசீலனம் ப்ரசாரம் இவைகளுக்கு ஒரு சிறந்த உபாயமாக இருக்கிறது என்றும்ஸாதிக்கும்படி இருந்தது.

டில்லியிலிருந்து ஸ்ரீ. உப. காளிரங்காசாரியரும் இவ்விடம் வந்திருந்தார். கடைசி நாளன்று ஸ்ரீ அழகியசிங்கர் சரித்ரத்தை முக்யமாக ஸந்யாஸம், ஆஸ்தானம், ஸஞ்சாரம் இவைகளைப்பற்றி ச்லோகரூபமாக எண்பது ச்லோகம் வரையில் எழுதிக்கொண்டுவந்து வாசித்தார். ஸபை ஆரம்பத்தின்போது ஸ்ரீஸந்நிதி குருபரம்பரையை ஸ்ரீ அழகியசிங்கர் சுருக்கமாக ஸாதித்ததற்கு அனுகுணமாக ஸபையின் முடிவில் ஸ்ரீ அழகியசிங்கரின் சரித்திரத்தையும் இந்த ஸ்வாமி ச்லோகரூபமாக எழுதி வாசித்தது பொருத்தமாக இருக்கிறது என்று எல்லோரும் அபிப்ராயப்பட்டார்கள். ஸபையில் நேராக வந்து அந்வயித்தவர்களுக்கு யதாக்ரமமாக ஸம்பாவனை செய்யப்பட்டும் வ்யாஸங்கள் அனுப்பியவர்களுக்கும், தாங்கள் அந்வயித்த விவரத்தோடு தங்கள்விலாஸத்தை அனுப்பினவர்களுக்கும் யதோசிதம் ஸம்பாவனை மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டு ஸபை பூர்த்தியடைந்தது.

மதுராந்தகத்தில் கலாசாலையில் கலாசாலை நடப்பதற்கு விரோதமில்லாமல் கலாசாலையிலுள்ள வித்வான்கள் இங்கு ஸதஸ் நடக்கும் பத்து நாளும் குறிப்பிட்ட அதிகரணங்களில் குறிப்பிட்ட வித்வான்கள் விஷயங்களை சொல்லட்டும் என்று நியமித்ததின் பேரில் அந்தப்படி அங்கு பத்து நாளும் விஷயவிசாரம் நடந்தது. அவர்களுக்கும் யதோசிதம் ஸம்பாவனை நியமித்தாயிற்று.

ஆவணிமாதம் 4உ ஸ்ரீஜயந்தியன்று பெரிய பெருமாள் கண்ணன் திருமஞ்சனமும் ராத்ரி டோலை ஸ்ரீபாகவதபாராயணமும் ததியாரா

தனமும் வழக்கம்போல் நடந்தது. 14ந்தேதி வெள்ளிக்கிழமை ஸ்வாதித் திருமஞ்சனமும் வடுவூர் விஜயராகவாசாரியர் தன்னுடையதாக இருக்கவேணுமென்று ப்ரார்த்தித்து எழுதியதின் பேரில் அந்தப்படி அவர் உபயமாக நடந்தது. டில்லியிலிருந்து ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார் முதலியவர்களும், பம்பாயிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யங்கார், ஸ்ரீ சடகோபாசாரியர் முதலியவர்களும், ஹைதராபாத்திலிருந்து ஜஸ்டிஸ் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்களும், ஆந்த்ராவிலுள்ள ரங்காரெட்டி முதலியவர்களும் பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவித்துவிட்டுப்போனார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஸந்நிதியில் நடக்கும் பகவந்நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீஸந்நிதியில் ராத்திரி நித்யாநுஸந்தாநம், ஸேவை சாற்றுமுறை கோஷ்டியானதும் ஸ்ரீ அழகியசிங்கர் ஆச்ரமத்திற்கு எழுந்தருளின பிறகு 'லக்ஷ்மீநரஸிம்ஹ! நரஸிம்ஹ! ஸ்ரீமந்நரஸிம்ஹ!' என்கிற மூன்று நாமங்களுடன் க்ரமமாக கொஞ்சநாழிகை ஸங்கீர்த்தனம் குழாங்களாக செய்யப்பட்டுவருகிறது. அந்த ஸந்தர்பத்தில் அதுவிஷயமாக ஸ்ரீ அழகியசிங்கர் ஒரு நாள் ஸாதிக்கும்படியிருந்தது. அதாவது:— 'வெள்ளிமண்டபத்தில் மூன்று நரஸிம்ஹர்கள் எழுந்தருளியிருக்கிறார்கள். அவர்கள் மூன்று பேரையும் உத்தேசித்து இம் மூன்று திருநாமங்களும் ப்ரதக்ஷிணமாக வருகிறதென்றும், இந்த மூன்று மூர்த்திகளுடைய அநுஸந்தானத்துடன் இந்த நாமங்களைச் சொல்லவேண்டுமென்று ஸாதித்துவிட்டு 'லக்ஷ்மீந்ருஸிம்ஹ' என்பது பெரியபெருமாள் திருநாமம். 'நரஸிம்ஹ!' என்பது பானக ந்ருஸிம்ஹன் (ரஜதத்தில் எழுந்தருளியிருக்கும் மங்களகிரி நரஸிம்ஹன்) திருநாமம் என்றும், 'ஸ்ரீமந்நரஸிம்ஹ' என்பது அவருக்கு வலது புறத்தில் மண்டபம் ஆரம்பித்தே முழுவதும் ஸ்வர்ணமயமாக ஸேவை ஸாதிக்கும் ஸ்வர்ண அழகியசிங்கருடைய திருநாமமென்றும், ஆக மூன்று திருநாமங்களைச் சொல்லும்போது மேற்கண்ட மூர்த்திகளையும் த்யானித்துக்கொண்டு சொல்லவேண்டியது' என்று.

அதேமாதிரி சாற்றுமுறை காலங்களில் 'நல்லநெஞ்சே' என்கிற பாசுரத்தை அநுஸந்திக்கும்பொழுது, 'அல்லிமாதர் புல்கநின்ற' 'நம்முடை நம்பெருமான்' என்கிறபோது பெரிய பெருமாளையும் (பெரிய பெருமாளைப் பிராட்டி தன் வலது கையால் தழுவிக்கொண்டிருப்பதால்) அநுஸந்திக்கவேண்டுமென்றும், 'செங்கணாளி' என்ற பாசுரத்தில் 'எங்களீசன் எம்பிரானை' என்கிறவிடத்தில் ஸ்வர்ண அழகியசிங்கரையும் அநுஸந்திக்க வேண்டுமென்றும், ஸ்வர்ண அழகியசிங்கர் ஐதிஹ்யத்தில் ஈசனுடைய (ருத்ரனுடைய) ஆவேசத்தால் ஸ்வர்ண அழகியசிங்கர் (அஹோபிலத்துக்கு) சிங்கவேழ்குன்றத்துக்கு ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய ஆராத்யராக எழுந்தருளினபடியால் பாவிஜ்ஞானம் உள்ளவரான ஆழ்வார் இப்படி அநுஸந்தானம் செய்யக்கூடும் என்று ஸாதித்தாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர் இந்த அநுஸந்தானத்திற்கு ஒற்றுமையாகவே கருடகிரி என்று சொல்லப்படும் சிங்கவேழ்குன்றம் (ஸ்வர்ணமயமான) பொன்மலைக்கு ஸமமான கருடனுடைய மூர்த்தியை ஜ்ஞாபகப்படுத்தும் வண்ணம் பொன்மயமான மண்டபம் அமைந்திருக்கிறது. இதையும், அதில் டோலையின்கீழ் (செங்கணாளை) இரண்டு யாளிகளும், டோலையில் பைங்கணானையின் இரண்டு கொம்புகளும் அமைந்து ஸேவை ஸாதிப்பதையும் நாம் அநுபவித்து உணர வேண்டிய விஷயம்.

நாமஸங்கீர்த்தன ப்ரபாவத்தைப்பற்றி ஒரு நாள் ஸாதிக்கும்போது வேதபாராயணங்களை செய்துவிட்டு சொல்லுகிற

'यस्य स्मृत्या च नामोक्त्या तपोयज्ञक्रियादिषु ।
न्यूनं संपूर्णतां याति सद्यो वन्दे तमच्युतम् ॥'

(எந்த அச்யுதனுடைய ஸ்மரணத்தினாலும், நாமங்களைச் சொல்வதினாலும் தபோ யஜ்ஞம்

ஸ்ரீ:

"ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனும் ஸ்ரீமதழகியசிங்கரும்"

யுதிஷ்டிரர் பீஷ்மரை ப்ரார்த்தித்து ஸிம்மாத்ரீயில் வஸிக்கின்ற ஸ்ரீநரஸிம்மமூர்த்தியான எம்பெருமான் அஹோபிலத்தினின்றும் எப்படி எழுந்தருளினான்? அதன் விபரத்தையும், அத்திவ்யதேசத்தின் மஹிமையையும் அருளிச்செய்யவேண்டுமென, ஸ்ரீபீஷ்மர் கூறுகின்றார். ஸ்ரீ நரஸிம்ஹனை ஸேவிப்பவர்கள் எல்லா பாபங்களினின்றும் நீங்கி ஸம்ஸாரபந்தத்தையறுப்பார்கள். ஸிம்மாத்ரிநாதனைத் தியாநித்தால் எல்லா மங்களங்களுமுண்டாகும். பதிதனும் அவனுடைய வைபவத்தைக் கேட்டால் புனிதனாவான். பிரமன், ருத்ரன், சந்திரன், சூரியன், இந்திரன், ப்ருஹஸ்பதி, வருணன், குபேரன் முதலிய தேவர்களின் ரூபங்களால் யஜ்ஞமூர்த்தியான அந்த பகவானே எல்லாவுலகங்களையும் ரக்ஷிக்கிறான்.

முற்காலத்தில் நரஸிம்மமூர்த்தியான விஷ்ணு அசுரராஜனான ஹிரண்யனை ஸம்ஹரித்த பின்பு அஹோபிலம் என்கிற மலையில் பயங்கரமான ரூபத்துடன் யோகத்திலெழுந்தருளியிருந்தனன். அப்படி யோகநிஷ்டனாக எழுந்தருளியிருந்த ஸ்வாமியை தேவர்கள் புருஷோத்தமா! லக்ஷ்மீகாந்தா! தாமரைக்கண்ணா! வேதப்பொருளே! லோகநாதா! உம்மை நமஸ்கரிக்கின்றோம். உலகங்களைப்படைத்து அளித்துக் காப்பவர் நீரே! யாகங்களின் பலன்களைக் கொடுப்பவரும் நீரே! ஓ நாதனே! உமது திருவடியைச் சரணமடைந்த அடியோங்களைக் குளிரக் கடாக்ஷித்தருளவேண்டும். எல்லாவுலகங்கட்கும் நீரே பிதா. பல சத்ருக்களாலும் பீடிக்கப்பட்ட எங்களைக் காத்தருளும், பலவாறு தேவரீரை நமஸ்கரிக்கிறோம்' என்று துதித்தார்கள். அழகிய சிங்கரும் பக்தர்களான தேவர்களிடத்தில் க்ருபை செய்து 'ஓ தேவர்களே! நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? என்னை நீங்கள் ப்ரார்த்திப்பதற்குக் காரணமென்ன? நான் உங்களுக்குச் செய்யவேண்டுவது உண்டாகில் சொல்லுங்கள்' என்றுகேட்க தேவர்கள், 'ஸர்வேச்வரனே! இந்தயோகபார்க்கத்தை விட்டு போகங்களைப் பரிக்ரஹித்து எங்களை ரக்ஷித்தருளவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார்கள். பகவான் இதைக் கேட்டு இவர்களிடத்தில் வாத்ஸல்யத்தினால் அருளிச்செய்கிறான். 'தேவர்களே! ஸிப்மாத்ரி என்னும் மலையில் நான் ரிஷிகளோடும் உங்களோடும் சேர்ந்து வஸிக்கப்போகிறேன். இப்மலையில் யோகீச்வரனாக வஸித்துக்கொண்டு தேவர்களை

முதலிய வைதிக கர்மங்களில் ஏற்பட்ட குறைவானது உடனே பூர்த்தியை அடைகிறதோ, அந்த அச்யுதனை வணங்குகிறேன்)

'वेदाक्षराणि यावन्ति पठितानि द्विजातिभिः ।
तावन्ति हरिनामानि कीर्तितानि न संशयः ॥'

(ப்ராஹ்மணர்களினால் எவ்வளவு வேதாக்ஷரங்கள் படிக்கப்பட்டதோ, அவ்வளவு ஹரிநாமங்கள் கீர்த்தனம் பண்ணப்பட்டன; ஸம்சயம் இல்லை) என்கிற இரண்டு ச்லோகங்களையும் ஸாதித்துவிட்டு, முதல் ச்லோகத்தின்படி காலை முதல் அன்று செய்யப்பட்ட கார்யங்களிலுள்ள குறைகளை இந்த நாமஸங்கீர்த்தனம் பூரணம் செய்யுமென்றும், வேதபாராயணத்துக்குள்ள ப்ரபாவம் அக்ஷரந்தோறும் ஹரிநாமமாக கீர்த்தனம் செய்யப்பட்டதாக ஆகுமென்று சொல்லும் இரண்டாவது ச்லோகப்படி ஸாக்ஷாத் ஹரிநாம கீர்த்தனம் முக்யமாக இருக்கிறதென்றும், முதல் ச்லோகத்தில் 'அச்யுத' என்கிற பதம் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை 'நாதயோகி' என்கிற ச்லோகத்தில் 'அச்யுத' என்று ஸம்போதித்திருக்கிறபடியாலும், இரண்டாவது ச்லோகத்தில் 'ஹரிநாமாநி' என்கிறவிடத்தில் (ஹரி சப்தம்) ஸாக்ஷாத்தாகவே ஸ்ரீந்ருஸிம்ஹனைச் சொல்லுமாகையாலும், ந்ருஸிம்ஹ வாசகங்களான (அரியும் ந்ருஸிம்ஹ மூர்த்திகளுக்கும்) பாரிபாஷிகமான மூன்று நாமங்களையும் நாம் நித்யம் அநுஸந்திக்கவேண்டியது மிகப் பொருத்தமுள்ளது என்றும் ஸாதிக்கும்படியாயிருந்தது.

யும் மனிதர்களையும் காக்கிறேன். யோகங்களை விரும்புகிற நீங்கள் அம்மலைக்குச் செல்லுங்கள் என்றான்.

பின்பு தேவர்களெல்லோரும் திரண்டு விமானங்களிலேறி அந்த ஸிம்மாத்ரிக்குச் சென்று வெகுகாலம் பகவானை எதிர்பார்த்தும் எழுந்தருளக் காணுமையால் மிகவும் வருந்தித் தவஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்படி இருபத்தோரு யுகங்கள் சென்றபின், அந்த ஸிம்மாத்ரியில் அநேக சூரியர்கள் உதித்தாற்போல் ப்ரகாசித்தும், ஸ்வர்ணவர்ணமான தலை மயிர்களும், மின்னல் போல் விளங்குகின்ற கவசமும், ஜ்வலிக்கின்ற நாக்கும், சிவந்த வாலும், மணிமயங்களான திருவடிகளும், பளபளப்போடு கூடின பற்களுமுடைய பயங்கரமான ரூபத்துடன் எம்பெருமான், கோடி சூர்யர்கள் சேரவுதித்தாற்போல் மிகவும் ப்ரகாசித்துக்கொண்டு அங்கெழுந்தருளினான். அப்பொழுது பயங்கரமும், ஆச்சரியமுமான அந்த ஸிம்மத்தைக் கண்டு தேவர்கள் எல்லோரும் பயந்து மலையின் குகைகளில் மறைந்தனர். சங்கம், சக்ரம், வநமாலை இவற்றை தரித்தவரும், குண்டலம், கேயூரம், மகுடம், நூபுரம், அரைநாண்மாலை முதலான திவ்ய ரத்நாபரண அலங்க்ருதர்களுமான ஸநகர், ஸநந்தனர், ஸநத்ஸுஜாதர், நாரதர், பர்வதர், குமுதர், ஜயர், விஜயர் முதலிய வைகுண்டவாஸிகளான மஹாயோகிகள் அந்த ஸிம்மாத்ரியின் மேலெழுந்தருளி திவ்ய புஷ்பவர்ஷம் வர்ஷித்து ஸிம்மரூபியான அந்த ஸ்வாமியை ஸேவித்து ஆநந்தித்தார்கள்.

பின்பு தேவர்களும் பகவானை 'ப்ரஸந்நமாக ஸேவை ஸாதித்தருளவேண்டும்' என்று பல வாறாக ப்ரார்த்திக்க, ஜகந்நாதனாகிய புருஷோத்தமன் பெரிய திருவடியின் மேலேறி ஸிம்மாத்ரியில் எழுந்தருளி திவ்யநரஸிம்ஹனாய் உத்தமமான ஸிம்மாத்ரிவிமாநத்தின் மத்தியில் வாஸம் செய்துகொண்டு, குகைகளில் மறைந்த பக்தர்களான தேவர்களை அநுக்ரஹித்து ஸந்தோஷிப்பித்தனன். தேவர்களும் அம்முநீச்வரர்களும் அநேகவித போகங்களால் நரகேஸரியை ஆராதித்தார்கள். பெரிய திருவடியின் மேலெழுந்தருளின அந்த நரஸிம்ஹனைத் தரிசித்தவர் பாபிகளாயினும் சுவர்க்கத்தையடைகின்றனர். அந்த பகவானுடைய முன்னே நின்று தேவராஜன் மோக்ஷத்தை உத்தேசித்து துதி செய்தான். யமன், வருணன், குபேரன் இவர்கள் அவரவர் திக்கில் நின்று எம்பெருமானை ஸேவித்தார்கள். இப்படி ப்ரஹ்மா முதலிய ஸகல தேவர்களாலும் பஜிக்கப்பட்ட அந்த நரஸிம்மமூர்த்தியை ஸேவித்த மனிதர் கெட்ட நடவடிக்கையுள்ளவராயினும் பித்ருபக்தியில்லாதவராயினும், வேறு பாபங்களைச் செய்தவராயினும் சுவர்க்லோகத்தை யடைகின்றனர். இந்த அநாதியான ஸிம்ஹாத்ரிநாதனுடைய அவதாரகதையைக் கேட்பவர் மோக்ஷலோகத்தையடைவார்கள்.

தர்மபுத்ரனே! நீரும் அந்த ஸிம்ஹாத்ரி நாதனைக் குறித்து இங்கிருந்து க்ஷேமங்களை ப்ரார்த்திக்கக் கடவீர். அல்லது அந்த ஸ்தலத்திற்கே சென்று அத் திருமாலைப் பூசித்தால் நீர் ஸர்வகாமங்களையும் பெறலாம். இந்தக் கதையைக் கேட்கின்றவர்களும், சொல்லுகின்றவர்களும் இவ்வுலகத்தில் எல்லா சுபங்களையும் அநுபவித்துப் பரமபதத்தையுமடைவார்கள். இவ்விதம் சேஷதர்மத்தில் நாற்பத்தி எட்டாவது அத்யாயத்தில் ஸிம்ஹாத்ரி மாஹாத்ம்யமென்னும் புண்ய சரித்ரம் எழுதப்பட்டது. இவ்வளவு மஹிமை வாய்ந்த எம்பெருமானை ஆராதிக்கும் பாக்யம் பெற்ற ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யர்களாய் எம்பெருமானே ஆசார்யாவதாரம் செய்தருளி பக்த ஜனங்களை அவர்களுக்கு தாம் பக்தியுடன் அபேக்ஷித்துக் காத்திருக்குமிடங்களில் திவ்ய ஸேவையைக் கொடுத்து அவர்களை க்ருதக்ருத்யர்களாகச் செய்து பரமோபகாரம் செய்தருளிவரும் மஹாபாக்யசாலிகளான மஹான்களைப் போற்றி வழிபடுவதே சிறந்த உபாயம். இதுகாரணம் கொண்டு இந்த மஹாபுருஷர்களுக்கு 'ஸ்ரீமத் அழகியசிங்கர்' என்று அழைக்கப்படுவது மிகவும் பொருத்தமுள்ளதே.

ஸ்ரீ:

"அழகிய மணவாளதாஸர்" (என்கிற)

"திவ்யகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்"

இவர் ஸ்ரீரங்கமாநகரைச் சேர்ந்த ஓர் வீர வைணவகுலத்தில் பிறந்தவர். அறியாப் பருவம் முதலே அரங்கனிடம் அளவற்ற பக்தி பூண்டிருந்தபடியால் இவர் பிள்ளைப் பெருமாள் என்றழைக்கப்பட்டார். அரங்கனுடைய க்ருபாப் பிரவாஹத்தினாலும், ஆழ்வார்களிடம் பூண்ட அளவற்ற பக்தியினாலும் அருளிச்செயல்களில் இவருக்கிருந்த ஆழ்ந்த பற்றுதலினாலும் இளமையிலேயே இனிய சுவை ததும்பும் செந்தமிழ்ப் பாக்களையியற்றும் திறமை பெற்றிருந்தார்.

அரங்கனுடைய பெருமை பற்றியும் பரம புருஷனுடைய பரத்வம் பற்றியுமே இவருடைய பாட்டுக்கள் அமைவது வழக்கம். எந்தக் காலத்திலும் ‘ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு’ என்ற முதலாழ்வார்கள் அருளிச்செயலுக்கிணங்க எந்த வேலை செய்துகொண்டு எங்கேயிருந்தாலும் அணியரங்கனிடம் வைத்த சிந்தையுடனேயேயிருந்துவந்தார், இவர் உலகியலறிவுக்கு இன்றியமையாத அச்சங்களையும் செவ்வனே பெற்றிருந்தார்.

ஜீவனார்த்தமாக இவர் அக்காலத்தில் இருந்த அரசாங்கத்தில் உத்யோகம் பார்த்துவந்ததாகத் தெரிகிறது. அப்போது நடந்த ஓர் ஸம்பவமே இவரது பக்தியை விளக்கப் போதிய சான்றாகும். அப்போது ஒருகால் அரங்கனுடைய ரதோத்ஸவம் நடந்துகொண்டிருந்தது. பிள்ளைப் பெருமாளைய்யங்காருக்குத் தம் அலுவலகத்தில் கடுமையான வேலையிருந்ததாலோ பின் எதனாலோ இவருடைய அதிகாரிகள் ரதோத்ஸவத்திற்குப் போய் அரங்கனை தரிசிக்க அனுமதியளிக்க மறுத்துவிட்டார்கள். பக்திப் பெருஞ் செல்வத்துடன் கடமையில் கண்ணுள்ள பிள்ளைப் பெருமாள் காரியாலயத்திலே தங்கியிருந்தாலும் அன்று அரங்கனிடமே சிந்தை முழுதும் செலுத்தியிருந்தார். அங்கிருந்தே அரங்கனுக்கு நடக்கும் விபவங்களை ஒவ்வொரு க்ஷணமும் அனுபவித்துக்கொண்டிருந்தார்போலும்.

அப்போது திடீரென்று பிள்ளைப்பெருமாள் தன் மேலுள்ள உத்தரீயத்தை எடுத்துக் கசக்கிக் கீழே போட்டு மிதித்தும் தமது மேஜையைத் தட்டியும் தேய்த்தும் இடம் விட்டு எழுந்து அங்குமிங்கும் பரபரப்பாக ஓடியும் இன்னதென்று நிர்ணயிக்கவியலாத ஓர் நிலையையடைந்தார். அதைக் கண்ட அங்கிருந்த மற்ற உத்யோகஸ்தர்கள் சிந்திக்கலுற்றார்கள். ‘இவர் இன்று காலையிலிருந்தே முழு மனத்துடன் வேலை செய்யவில்லை. இவர் சிந்தை தன் வசத்திலிருப்பதாகத் தெரியவில்லை. இப்போது இவர் செய்கை அடியோடு பைத்தியக்காரனைப் போலவே தெரிகிறது’ என்று தத்தமக்குள் எண்ணியபடியே பேசிக்கொண்டும் இருந்தார்கள். உடனே அச்செய்தி மேலதிகாரிகளுக்கு எட்டவே அவர்கள் வந்து ஐயங்காரை நோக்கி ‘உமது செய்கைகள் இப்படி இருப்பதற்குக் காரணம் என்ன?’ என்று கேட்டார்கள். பிள்ளைப் பெருமாளும் முகவாட்டத்துடனும், மிக வருத்தத்துடனும் ‘இன்று என்னப்பன் அரங்கத்தரவணைப் பள்ளியானது திருத்தேர் உத்ஸவம். எம்பெருமான் திருத்தேரில் வீதிவலம் வந்துகொண்டேயிருக்கையில் திடீரென்று ஓரிடத்தில் தீப்பற்றிக் கொண்டது. இருந்தவர் யாவரும் யாது செய்வதென்றறியாது திகைத்தனர். திகைத்தால் அப்பன் திருத்தேரில் பற்றிய தீ அவிந்துவிடுமோ? அதன் பின் அப்பன் திருமேனி என்னாவது?’ என்று சொல்லிவந்தவர் திடீரென்று விக்கி விக்கி அழ ஆரம்பித்தார். அப்போது அவ்வதிகாரிகளும் திகைத்து நிற்கையில் ஐயங்கார் தாமே தேறி ‘நானும் அங்கே பார்த்துக்கொண்டு நிற்பது தகுதியல்ல. அரங்கனுக்காக உபயோகப்படாத சரீரம் எதற்கு?

என்றைக்கும் அழியும் தன்மையுடையசரீரம், அரங்கன் நிமித்தமாக அழிந்தால் அது ஸ்வரூபப்ராப்தமன்றோ? அவன் கொடுத்த சரீரம் அவனுக்காகப் பயன்படுவதிலும் மேலான செய்கையுண்டோ? என்று நினைத்து அத் தேரில் ஏறினேன். தேரில் கைங்கர்யபரர்களைத் தவிர மற்றவர்கள் ஏறுதல் தகுதியன்று. இருந்தாலும் ஆபத்துக்குப் பாபமில்லை என்று நான் ஏறி என்னாலானவரையில் தீயையவிக்க முயன்றேன். பரமன் பாற்கடல் துயின்ற பாழியந்தோளனுடையதிருவருளால் தீயும்ஒரு வழியாக அவிந்தது' என்றார். அதைக்கேட்ட அவர்கள் இதோ இவர் காலையிலிருந்து இங்கே தானே இருக்கிறார், அரங்கனாவது, ரதோத்ஸவமாவது, தீயாவது, அவிப்பதாவது! சரி தான், இவர் காலையிலிருந்தே சித்தஸ்வாதீனமில்லாமலிருந்தார். இப்போது கடுமையான பைத்தியம்தான் பிடித்திருக்கிறது என்று தீர்மானித்தார்கள். இப்படியிருக்கையிலேயே அரங்கன் அன்றையதினம் ரதத்தில் எழுந்தருளுகையில் ரதத்தில் திடீரென்று தீப்பிடித்ததென்றும் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் திகைத்திருக்கையில் பிள்ளைப்பெருமாளையங்கார் ஒருவரே துணிந்து ரதத்தில் ஏறித் தீயை அவித்தார் என்ற விவரமும் அதிகாரபூர்வமாக அந்தக் காரியாலயத்திற்கு விவரமான சமாசாரம் தெரியவந்தது. அதையறிந்த அரசாங்கத்தார் பிள்ளைப் பெருமாளுடைய உடல் மாத்திரம் காரியாலயத்தில் இருக்கிறதே தவிர அவருடைய சிந்தையும், ஆவியும் அரங்கனிடமே ஆழங்கால்பட்டு நிற்கிறதென்றும், ஒருவராலும் முடியாத மஹத்தான காரியம் அவருடைய சிந்தையினாலும், பக்தியினாலுமே நடந்தேறியிருக்கிறதென்றும் தீர்மானித்தனர். அதன் பயனாக பரமஜ்ஞானியும், அத்யந்த பக்தச்ரேஷ்டனுமாகிய ஐயங்காரைக் கட்டுப்படுத்தி ஓரிடத்தில் வேலை வாங்குதல் அரங்கனுடைய திருவுள்ளத்திற்குச் சீற்றம் உண்டாக்கும் என்றறிந்து அவருக்கு வேலையிலிருந்து நிரந்தர ஓய்வும், உபகாரச் சம்பளமும் அளித்தனர். அன்று முதல் ஐயங்கார் அரங்கனைக் கணமும் பிரியாது கைங்கர்யங்கள் புரிந்துவந்தார்.

இவருடைய வைணவப் பற்றைக் கண்டு சைவர்கள் பொறாமை கொண்டார்கள் என்று கூறப்படுகிறது. ஆயினும் இவரது ஆழ்ந்த கல்வித் திறனும் ஜ்ஞானமும் எம்மதத்தினரையும் இவரிடம் விசேஷமான பற்று கொள்ளச் செய்தது. இங்ஙனேயிருக்கையில் ஒரு நாள் அரங்கன் கோயில் பரமனுடைய விசுவரூபதரிசனத்திற்காக இருந்த கபிலை என்னும் பசு தன்னிச்சைப்படியே தினமும் திருவீதிகளில் ஸஞ்சரித்துவருகையில் சிறிது அதிகமாகவே ஸ்ரீரங்கத்தின் எல்லையைக் கடந்து போகையில் திருவானைக்காவலிலுள்ள சைவர்கள் அதைப் பிடித்துக் கட்டிப் போட்டார்கள். தினமும் இருட்டும்போது தானே கோயிலுக்குத் திரும்பிவரும் திருசுரபி அன்று வராததைக் கண்ட அரங்கன் கோயிற்றுறையார் பசு சென்ற வழியே சென்று விசாரிக்கையில் திருவானைக்காவலில் இருப்பதாக அறிந்தார்கள். அங்கே போய் விசாரிக்கையில் அச்சைவர்கள் திருசுரபியாகிய அரங்கனது பசு தம்மிடம் இருப்பதாகவும், பிள்ளைப் பெருமாளையங்கார் வந்து கேட்டால் விடுவதாகவும் சொன்னார்கள். அதையறிந்த ஐயங்காரும் அரங்கனது பசுவின் நிமித்தமாக அச்சைவர்களிடம் சென்று திருசுரபியை விடுமாறு கேட்டார். அவரைக் கண்ட சைவர்கள் தங்களது தெய்வமாகிய கைலாஸபதியின் மீது ஓர் பாடல் ஐயங்கார் கவனம் செய்து பாடவேண்டுமென்றும் அப்படி அவர் பாட இசையாவிடில் பசுவைத் தாங்கள் அவிழ்த்துவிடமுடியாது என்றும் சொன்னார்கள். பரம்பரை வைணவரும் வீரவைணவருமாகிய ஐயங்கார் வாக்கினால் பாடல் பெற்றால் ருத்திரனுக்குப் பரத்வம் வந்துவிடுமென்றது சைவர்களது கருத்து. ஐயங்காரே உமாபதியைப் பாடினாரென்றால் மற்ற எல்லா வைணவர்களும் தாமே சிவனுக்குப் பரத்வம் சொல்ல வந்துவிடுவார்கள் என்பது அவர்களுடைய திடமான கருத்து. ஆனால் அரங்கனைத் தவிர வேறு யாரையும்

பாடியறியாத ஐயங்காரின் வாக்கு சிவனைப் பாடுமோ? பாடாது. ஆகையால் சிவனைக் குறித்துப் பாடல் பாடத் தனக்கு வாராது என்று ஐயங்கார் கூறிவிட்டார். தம் கோயிலுக்கருகே வந்து மேய்ந்த பசுவைத் தாமும் விடமுடியாதென்று திருவானைக்காச் சைவர்களும் கண்டிப்பாகக் கூறினார்கள். ஐயங்கார் அவர்களது உறுதியை நோக்கிச் சிறிது நேரம் சிந்தித்தார். இவர்களோ விடுபவர்களாகத் தெரியவில்லை. இனியரசாங்கத்தார் உதவி பெற்றுப் பசுவைக் கொண்டு செல்வோமென்றாலோ அதற்கு எத்தனை நாள் ஆகுமோ? அதற்குள் அரங்கனது விச்வரூபம் நடைபெற வேண்டும். அதிக நாள் பசு இங்கே இருந்தால் பசுவுக்கு ஒன்றும் துன்பங்கள் உண்டாகாதிருக்கவேண்டுமே, இதென்ன தர்மசங்கடம் என்று சிந்தித்த ஐயங்கார், சரி எதுவானாலும் ஆகட்டும், தற்போது பசுவை எப்படியாவது மீட்டுப் போனால் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்து அவர்களை நோக்கி 'எனக்கிப்போது பாட வரவில்லை. ஏன் என்றே தெரியவில்லை. ஆனால் உங்கள் கோரிக்கைப்படி நான் பாடல் எழுதியனுப்புகிறேன். அப்பாட்டின் முதல் அடியை மட்டும் இப்போதே இங்கே தொடங்கிவிடுகிறேன். தயவு செய்து மாட்டை அவிழ்த்து விடுங்கள் என்றும், அரங்கன் திருவடிமேலாணை நிச்சயம் நாளை பாசுரத்தை எழுதியனுப்புகிறேன் என்றும் சொன்னார். இவர் அத்தியந்த பக்தி பூண்டொழுகும் அரங்கன் மலரடிகளில் ஆணையிட்டபடியால் எப்படியும் கண்டிப்பாகப் பாடல் எழுதியனுப்புவார் என்று அச்சைவர்கள் தீர்மானித்துப் பசுவை அவிழ்த்துவிட்டுவிட்டார்கள். ஐயங்காரும் மகிழ்ந்து தான் மறுநாள் பாடியனுப்பவிருந்த செய்யுளின் முதலடியாகிய 'மங்கைபாகன்' என்ற அடியை அப்போதே அவர்கள் எதிரில் கூறிவிட்டுக் கிளம்பினார். சைவர்கள் அந்த 'மங்கைபாகன்' என்ற சொல்லைக் கண்டு 'ஆஹா வைணவத்திற்கு எப்படி திருவுடன் சேர்ந்த திருமால் முக்கியமோ அப்படியே நமக்கும் உமையோடு சேர்ந்த உமாபதியாரே உத்தேச்யம் என்பதை இவ்வடி எவ்வளவு தெளிவாகக் காட்டுகிறது. ஐயங்காரின் மேதாவிலாசம் ஈடில்லாதது' என்று போற்றி இனி ஐயங்கார் சிவனைக் குறைவாகப் பேசமாட்டார் என்று மகிழ்ச்சியுடன் இருந்தார்கள்.

ஐயங்கார் பசுவைக் கொண்டு அரங்கன் கோயிலில் விட்டார். இனி அப்பசு திருவானைக்காவுக்குப் போகாமலிருக்கத் தக்க ஏற்பாடுகளும் செய்தார். தாம் திருவானைக்காவில் ஆரம்பித்துவிட்ட செய்யுளை உடனே பூர்த்தியும் செய்தார். அச் செய்யுளை ஓர் ஆள் வசம் உடனே திருவானைக்காவுக்கு அனுப்பியும் வைத்தார். கவிதைக் களஞ்சியமாகிய ஐயங்காருக்கு ஓர் செய்யுள் இயற்றத் தனியாக நேரம் தேவையோ? தம் கருத்துக்கு ஒருப்படாத விஷயத்தைப் பாடவேண்டாமென்றே சிறிது தாமதித்தார். அவர் எழுதிய செய்யுளின் முதலடி 'மங்கை பாகன் சடையின் வைத்த கங்கை யார் பதத்து நீர்' என்பதாகும். உமாதேவியாரைப் பக்கத்தில் உடைய சங்கரனுடைய சடைமுடியில் வைத்திருக்கும் கங்கை யாருடைய திருவடியில் உற்பத்தியாகிய நீர்? லக்ஷ்மீநாராயணனுடைய திருவடியின் திருமஞ்சனத் தீர்த்தமல்லவா? என்பது அந்த அடியின் பொருள். இப்படியே ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்வஸௌலப்யங்களையும் உருத்திரன் முதலிய இதர தேவதாந்தரங்களின் சிறுமைகளையும் அந்தப் பாட்டில் செவ்வையாகவும் எளியநடையிலும் விளக்கினார். 'ஆதலாலரங்கனன்றி வேறு தெய்வமில்லையே' என்பது கடைசி அடியாகும். இப்பாசுரம் அடங்கிய ஓலையைக் கண்ட சைவர்கள் தங்கள் முன்பு கொண்ட மகிழ்ச்சி மாறிக் கோபமும், வெட்கமும், வருத்தமும், வியப்பும் மாறிமாறி யெய்தினார்கள். அடடா! மோசம் போனோமே ஆரம்பித்தது ஒன்று, முடிந்தது வேறு. முன் கொண்ட கருத்து ஒன்று. இப்பொழுது முற்றிலும் மாறுபாடாகவல்லவோ தெரிகிறது? அவ்வைணவர் தமது கருத்தை விடாமை மாத்திரமல்ல; நமக்கும் ஓர் சிறந்த பாடமல்லவோ கற்பித்துவிட்டார் என்று வாளாவிருந்தனர்.

சில சிதம்பரத்துச் சைவர் மேற்கண்ட வரலாற்றைக் கேள்வியுற்று மனம் பொறுமல் தமக்குள் கூடி யோசித்து ஓர் ஓலையில் 'அழிகுறும்பர் வாழுமூர் அரங்கமல்லதில்லையே' என்று எழுதி அதை பிள்ளைப் பெருமாளையங்காரிடம் கொண்டு கொடுக்குமாறு ஸ்ரீரங்கத்திற்கு ஓர் ஆள்வசம் அனுப்பினார்கள். ஓலை ஐயங்காரிடம் சேர்ந்தது. ஆனால் அது அவரிடம் சேர்ந்தபோது அவர் தமருகில் சில பாகவதோத்தமர்கள் அமர்ந்து பகவத்குணானுபவம் செய்துகொண்டிருந்தார்கள். ஓலையிலுள்ள விஷயத்தை ஐயங்கார் படித்துக் காட்டவும் அவர்கள் அதிலுள்ளதைக் கண்டு மனம்பொறுமல் வருந்தினார்கள். ஆனால் ஐயங்காரோ மனம் மகிழ்ந்து 'சிதம்பரத்துச் சைவர்கள் நடு நிலைமை தெரிந்தவர்கள். சரியானதே எழுதினார்கள்' என்றுசொன்னார். பிறகு ஓலை கொண்டுவந்தவர்களை நோக்கி 'ஓலை மிகவும் நியாயமாகவே எழுதப்பட்டிருக்கிறது. அதை எழுதியவர்களை நான் மிகவும்பாராட்டுகிறேன்' என்று சிதம்பரத்தோரிடம் சொல்லுங்கள். ஆனால் ஏதோ மிகுந்த அவசர ஜோலியாக இருந்திருப்பார்கள் அச் சைவர்கள். ஏனெனில் ஓர் புள்ளி வைக்க மறந்துவிட்டார்கள். இப்போதும் பிசகில்லை. அப்புள்ளியை நானே வைத்துவிடுகிறேன்' என்று அந்த ஓலையில் அரங்கமல்ல என்னுமிடத்தில் ஓர் அரைப் புள்ளி வைத்து அவ்வோலையைக் கொண்டுவந்தவர்களிடமே கொடுத்துச் சிதம்பரத்துச் சைவரிடம் சேர்ப்பிக்குமாறு அனுப்பினார்,

ஸ்ரீரங்கம் சென்றவர்கள் மகிழ்ச்சி பொங்க ஓலையுடன் வரக்கண்ட சைவர்கள் ஓலையை வாங்கிப் பார்க்குமுன்பே ஐயங்கார் சொல்லிய வார்த்தை என்று அவர்கள் சொல்லிய வார்த்தை கேட்டு மகிழ்ந்தார்கள். பிறகு ஓலையைப் பார்த்த உடனே தீயை மிதித்ததுபோலானார்கள். 'அழிகுறும்பர் வாழுமூர் அரங்கமல்லதில்லையே' என்றிந்த வாசகத்தில் 'அழிகுறும்பர் வாழுமூர் அரங்கமல்ல; தில்லையே' என்று புள்ளியிட்டுப் பிரிக்கப்பட்டிருந்தது. தங்களுடைய எழுத்தை அடியோடு கருத்து மாறுபடும்படி ஐயங்கார் மாற்றிவிட்டதில் வியப்பு ஒருபுறம். சிதம்பரத்தாரைத் தாக்கித் திட்டுவதற்குத் தாங்களே இடம் கொடுத்ததுபோல் ஆகிவிட்டதைக் குறித்து வெட்கம், ஐயங்காரிடம் கோபம், அவரது புலமையில் மதிப்பு ஆகியவைகளை ஒருங்கே கொண்டனர். இப்படி ஐயங்காருடைய வாழ்க்கையில் நடந்த ஸம்பவங்கள் அநந்தம். அரங்கனிடங்கொண்ட பக்தியின் பரீவாஹத்தால் இவர் 'அழகியமணவாளதாஸர்' என்று அழைக்கப்பட்டார். இவர் கூரத்தாழ்வானுடைய சிஷ்யரென்பது 'குழலிசையளிமேவு கூரம் வந்தருள் குரு பாணிரு பாதபோதடைந்தவன், அழகிய மணவாளதாஸனென்பவன் அடியவரடி சூடி வாழுமன்பனே' என்று இவர் பாடிய அடிகளால் அறியலாம். கூரத்தாழ்வானுடைய திருக்குமாரராகிய பட்டரிடம் இவர் காலக்ஷேபங்கள் கேட்டார் என்றும் தெரிகிறது. 'பட்டர் பொற்றாள் கதிநந்தமக்கே' என்று பாடியிருப்பதாலும் அது தெளிவாகிறது.

அரங்கன் மேலும், திருமாலிருஞ்சோலையப்பன் மேலும், திருவேங்கடத்தண்ணல்மேலும், 108 திருப்பதிகள் மேலுமாக இவர் எட்டுப் பிரபந்தங்கள் பாடியுள்ளார். அவைகளுக்கு 'அஷ்ட ப்ரபந்தம்' என்று குறிப்புப் பெயர் விளங்குகிறது. ஆழ்வார்களது சொல்லையும், பொருளையும் அங்கங்கே அதிகமாகக் கையாண்டிருப்பதால் இவரைப் 'பிரபந்தத் திருடி' என்று சமத்காரமாகச் சிலர் அழைப்பதுண்டு. இவரது பிரபந்தங்கள் ஆழ்ந்த தமிழறிவை ஊட்டவல்லன. அவை எட்டையும் நன்றாகப் பாடங்கேட்டவர்கள் ஐயங்காரது சாதுரியத்திலும் கல்வித் திறனிலும் சிறிதாவது பெற்று விளங்குவார்கள் என்பதில் ஐயமேயில்லை. வாழ்க! அழகிய மணவாளதாஸர். வாழ்க!! அன்னார் சமயப் பற்று.

குறிப்பு:— அழிகுறும்பர் வாழுமூர் அரங்கமல்லதில்லையே— தம்மையும் பிறரையும் அழிக்கும் குறும்பர்கள் வாழுகின்றவூர் அரங்கமேதான். அரங்கமல்லாத மற்ற எந்த ஊர்களி

லும் அவர்களில்லை. (சிதம்பரத்தார் மனதிலுள்ளபடி)

அழிகுறும்பர் வாழுமூர் அரங்கமல்ல; தில்லையே— அழிக்கும் குறும்பர் வாழுகின்றவூர் அரங்கமல்ல. அரங்கத்தில் அப்படிப்பட்ட குறும்பர்களே கிடையாது. ஆனால் அப்படிப்பட்டவர்கள் வாழும் ஊர் எது என்னில் தில்லையே. (சிதம்பரமேதான்) (இது அழகிய மணவாளதாஸர் திருவுள்ளப்படி.)

பிள்ளைப் பெருமாளையங்கார் திருவானைக்காச் சைவர்களுக்கு எழுதியனுப்பிய பாடல்)

மங்கைபாகன் சடையில்வைத்த கங்கை
யார் பதத்து நீர்?
வனசமேவு முனிவனுக்கு மைந்தனன
[தில்லையோ?
செங்கையாலிரந்தவன் கபாலமாரகற்றினர்?
செய்யதாளின் மலர் அரன் சிரத்தி
[லானதில்லையோ?
வெங்கண் வேழ மூலமென்னவந்ததுங்கள்
[தெய்வமோ?
வீரவாணனமரிலன்று விரலழிந்ததில்லையோ?
அங்கண்ஞாலமுண்டபோது வெள்ளி
[வெற்பகன்றதோ?
ஆதலாலரங்கனன்றி வேறு தெய்வமில்லையே.

குறிப்பு:— உமையைப் பங்கில் உடைய சிவன் சடையில் வைத்த கங்கை யாருடைய பாதத்திலிருந்து உண்டாயிற்று? பரமனுடைய நாபீ கமலத்திலிருந்து வந்தவரும், வேதமோதும் முனிவனுமான பிரமனுக்குச் சிவன் மைந்தனல்லவா? ரத்தமும், மாமிசமும் நிறைந்த கையால் பிச்சையெடுத்தாரே சிவன் அப்போது அவர் கையிலிருந்த பிரமகபாலத்தை யார் விழச் செய்தார்கள்? அர்ச்சுனன் கண்ணன் பாதத்தில் புஷ்பங்களை அர்ச்சிக்க அதே புஷ்பங்களைக் கைலாயத்திலிருந்த சிவனுடைய தலையில் அர்ச்சுனனே கண்டு களிக்கவில்லையா? சிவந்த கண்களையுடைய கஜேந்திரன் ஆதிமூலமே என்று கூப்பிடும்போது அதன் துயரம் தீர்க்க ஓடி வந்தது உங்கள் சிவனோ? உங்கள் தெய்வமாகிய சிவன் வாணாசுரனுக்கு உதவி செய்வதாக வாக்களித்துவிட்டு பாணனுக்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த சண்டையில் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வகையறியாது வீரமழிந்து ஓடவில்லையோ? எங்கள் பரமன் இவ்வுலகமெல்லாவற்றையும் விழுங்கியபோது கைலாயபருவதமும், அதன் தெய்வமாகிய சிவனும் அவன் வயிற்றில் போகாமல் ஒதுங்கியிருந்தார்களோ? இக்காரணங்களால் அரங்கநகரப்பனாகிய திருமாலைத் தவிர மற்றுமோர் தெய்வமுண்டோ? கிடையாது என்றபடி.

ஸ்ரீ மாலோல முத்ராலயத்தில்

கல்யாண பத்ரிகைகள், லெடர் ஹெட்டுகள், ரசீது புத்தகங்கள் மற்றும் தேவையான அச்சு வேலைகள் மிகச்சிறந்த முறையில் தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளில் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துசெய்து கொடுக்கப்படும். மதஸ்தாபனங்களுடைய வேலைகளுக்கும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை வெளியிடுவோர்களுக்கும் தகுந்த சலுகை காட்டப்படும்.

மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர், ஸ்ரீ மாலோல முத்ராலயம்,
30, பனகல் தெரு, திருவுள்ளூர்.

ஸ்ரீ:

என்னுடைய இன்னமுது

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இப்படிப் பல காலம் அவளுடன் தாம்பத்ய வாழ்க்கை நடத்தி அனேக தேசங்களில் ஸஞ்சாரம் செய்து வரும்பொழுது ஒரு ஸமயம் இம்மஹாபுஷ்கரிணியான ஹ்ருத்தாபநாசிநீயிலும் நீராடினான். தைவவசமாய் அன்று தை அமாவாஸ்யையாய் அமைந்தது. அதன் பிறகு வெகுகாலம் கடந்து கிழத்தன்மையை அடைந்து அத்தன்மையிலுண்டான கஷ்டங்களையும் அநுபவித்து மரணம் அடைந்தான். ஜாதிதர்மத்திலிருந்து ப்ரஷ்டனான இவனை யமதூதர்கள் தர்மராஜன் பக்கல் கொண்டு நிறுத்தினார்கள். யமனும் இந்த ப்ராஹ்மணனைக் கண்டவாறே எழுந்திருந்து எதிர்கொண்டழைத்து அர்க்ய பாத்யாதிகளால் பூஜித்து 'தேவரீர் தேவயாநத்தோடே மோக்ஷஸாம்ராஜ்யத்திற்கெழுந்தருளலாகும்' என்று வணக்கத்துடன் விண்ணப்பித்தான். ப்ராஹ்மணனும் மோக்ஷமடைந்தான்.

பிறகு தர்மராஜன் படர்களை நோக்கி, 'ஏன் இப்பிராஹ்மணச்ரேஷ்டரை இங்கு அழைத்து வந்தீர்கள்' என்று கடும் சினத்துடன் கேட்க, அதற்கு அவர்கள் மிகுந்த பயத்துடன், ஸ்வாமிந்! தேவரீர் அறியாதது ஒன்றுமில்லை. ஆயினும், அப்பிராஹ்மணன் தன் ஜாதிதர்மத்தை அறவே ஒழித்துவிட்டு சண்டாள ஸ்த்ரீயுடன் யதேச்சமாய் இருந்தபடியால், இவன் மோக்ஷமடைய அர்ஹதையற்றவன் என்று எண்ணி இங்கு அழைத்துவந்தோம்' என்று விண்ணப்பித்தார்கள். இதைக் கேட்ட யமன் சிரித்துவிட்டு, 'இவ்வந்தணன் எவ்வளவு கொடிய பாபத்தைச் செய்திருந்தபோதிலும் ஹ்ருத்தாபநாசிநீ என்னும் ஸரஸ்ஸில் அதிலும் தை அமாவாஸ்யையில் நீராடியதால் ஸர்வபாபத்தினின்றும் விமுக்தனானான். ஆகையால் அவன் மோக்ஷம் செல்லத்தகுந்தவன்' என்று சொன்னான். இதைக்கேட்ட படர்கள் மிகவும் ஸந்துஷ்டர்களானார்கள்.

ஆகவே எவனொருவன் இப் புண்யதீர்த்தத்தில் அமாவாஸ்யைதன்னில் நீராடி மகிழ்வனோ அவன் ஸமஸ்தபாபங்களினின்றும் விடுபட்டு ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிவாரத்தில் நித்யவாஸம் பண்ணுவான். மேலும் இதோ நமக்கு மேற்புறத்திலும் புஷ்கரிணிக்கு வாயவ்யதிக்கிலும் நித்யவாஸம் செய்யாநிற்கும் சிவபெருமானும் இத்தீர்த்தத்தில் நீராடி பரிசுத்தரானார்.

ப்ரியதர்சிநீ:- நாத! கௌசிக ப்ராஹ்மண வ்ருத்தாந்தம் என்னைப் புளகாங்கித காத்ரையாகச் செய்கிறது. மேலும் இப்பொழுது சிவபெருமான் பரிசுத்தரானார் என்று தாங்கள் சொல்வது விளங்கவில்லை. சிவபெருமானுக்கு என்ன அவத்யம் ஏற்பட்டது? அவர் எங்ஙனம் இத்தீர்த்தத்தின் மஹிமையால் பரிசுத்தரானார்? இவைகளையும் அடியாளுக்கு விவரமாகத் தெரிவிக்க ப்ரார்த்திக்கிறேன்.

மஞ்ஜுபாஷணன்:- ப்ரஹ்மாவுக்கு தக்ஷப்ரஜாபதி என்றொரு புத்ரனிருந்தார். அவருக்கு அதிரூபவதியான ஸதீ என்றொரு பெண் உண்டானாள். அவளை ஹரன் விவாஹம் செய்துகொண்டு அவளுடன் ஹிமய மலையில் தபஸ் செய்துகொண்டு வஸித்துவந்தான். இப்படியிருக்குங்காலத்தில் தக்ஷப்ரஜாபதி யாகம் செய்யவேண்டுமென்று இச்சையுடையவராய் தன்னுடைய பெண்களையும், ஜாமாதாக்களையும் வரவழைத்தார். ஆனால் ஸதீயையும், ஹரனையும் மட்டும் அழைக்கவில்லை.

ப்ரியதர்சிநீ:- இவர்களை அழைக்காததன் காரணம் என்ன?

மஞ்ஜுபாஷணன்:- சிவன் தக்ஷப்ரஜாபதியின் பிதாவான ப்ரஹ்மதேவனின் சிரஸ்ஸை சேதித்து அதனால் கோபமடைந்த ப்ரஹ்மாவினால் 'கபாலியாகக் கடவாய்' என்று சபிக்கப்பட்டான். தன் பிதாவுக்கு இழைத்த அபராதத்தை மனத்திற்கொண்டு இவ்விருவரையும் அழைக்கவில்லை. யாகம் வெகு விமர்சையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஸதீதேவியானவள் 'अनाहूतोऽध्वरं गच्छेत्' அழைக்காமலே யாகத்திற்குச் செல்லவேண்டும்) என்கிறபடியே தன் பிதாவினால் அழைக்கப்படாமலிருக்கும்பொழுதும், பர்த்தாவினால் தடுக்கப்பட்டவளாயிருக்கச்செய்தேயும் தன் பிதாவின்

யாகத்தைத் தரிசிக்கவேண்டுமென்று எண்ண முடையவளாய் ப்ரமதகணங்களோடுகூட யாக சாலையை யடைந்தாள். அப்பொழுது தக்ஷ ப்ரஜாபதி, யாகமந்த்ரோச்சாரணத்தைத் தவிர்த்து மற்றவையில் மௌனவ்ரதமுடைய வராயிருந்தார். ஆகையால் தன் வீடு தேடி வந்த மகளையும் வா என்றுகூட சொல்லவில்லை. அதைப் பார்த்து கோபமடைந்த ஸதீதேவி தன்னை, தன் பிதா வேண்டுமென்றே நிஷ்கார ணமாக அவமதித்ததாக எண்ணங்கொண்டு மிகுந்த கோபமுடையவளாய் தன் தகப்பனா ரைப் பார்த்து 'நாங்கள் உமக்கு என்ன அப காரம் செய்தோம்; எங்களை அநாதரணம் செய்து உம்மால் நடத்தப்படும் இந்த யாகம் பூர்த்தியடையாமல் போகக்கடவது' என்று சபித்துவிட்டு யோகசக்தியினால் தன்னுடைய சரீரத்தை அங்கேயே விட்டுவிட்டு ஆத்மா வைப் பிரித்து மேலெழுப்பிக் கொண்டாள். அதைப் பார்த்த உடன்வந்த ப்ரமதகணங்கள் ஹாஹாகாரம் செய்துகொண்டு ஓடிச்சென்று நடந்த வ்ருத்தாந்தங்களை ருத்திரனிடம் தெரி வித்தார்கள். இதைக் கேட்ட ருத்ரன் மிக வும் சினங்கொண்டு நெற்றியினின்றும் பெருகு கிற ஸ்வேதஜலத்தினால் வீரபத்ரனை ஸ்ருஷ் டித்தான். மிகவும் பயங்கரனாயும் நாநாவித மான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டும் தன் முன் நிற்கும் வீரபத்ரனைப்பார்த்து 'நீ அஹங் காரியும், என் பார்யையின் மரணத்திற்குக் காரணபூதனுமான தக்ஷனுடைய யாகசாலைக் குச் சென்று யாகத்தை அழித்து அவனையும் யமஸதனத்திற்கு அனுப்பி வா' என்று ஆஜ் ஞாபித்தான். ருத்ரனின் கட்டளைப்படியே வீரபத்ரனும் சென்று தக்ஷயாகத்தை நாசம் செய்து அவன் தலையையும் கொய்து யாக குண்டத்தில் போட்டுவிட்டான். தக்ஷப்ரஜா பதியினுடைய தலை துண்டிக்கப்பட்டவுடன், 'யஜமானனுடைய உத்திரவினால் செய்யப்பட்ட ப்ருத்யபாபம் யஜமானனையே சேரும்' என்கிற படி வீரபத்ரனால் செய்யப்பட்ட ப்ரஹ்ம ஹத்யை ரூபவதியாய்க்கொண்டு ருத்ரன் முன் சென்றது. அப்பொழுது ருத்ரனும் அதினின் றும்விடுபடுவதற்காக **'तरति तरति ब्रह्महत्यां योऽश्व मेधेनयजते'** (அச்வமேதயாகம்செய்பவன்ப்ரஹ்ம ஹத்யையினின்றும் விடுபட்டவனாகிறான்) என் கிறபடி அச்வமேத யாகம் செய்ய நினைத்தும், **'अयज्ञो वा एषः, योऽपत्नीकः'** (பத்நீவிஹீனன் யாகாநர்ஹன்) என்றிருப்பதால் தான் அபத் நீகனானபடியால் யாகம் செய்யமுடியாமலிருப் பதையும் அறிந்து ப்ரஹ்மஹத்யையினின்றும் விடுபட நிச்சயித்து புண்யதீர்த்தங்களில் நிஷே வணம் செய்யப்புறப்பட்டான். அநேக புண்ய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தும் ப்ரஹ்ம ஹத்யை பின் தொடர்ந்து வருவதைக் கவ னித்த ருத்ரன் மிகவும் விஷண்ணனானான். அப் பொழுது ஆகாசத்தினின்றும் 'போ! த்ரிபுர மர்த்தந! வீக்ஷாரண்யத்தில் 'ஹ்ருத்தாபநாச நம்' என்கிற ஓர் புண்யதீர்த்தம் இருக்கிறது. அந்த புண்யதீர்த்தத்தைக் குறித்து நடந்து சென்று ஸ்நாநம் செய்வீராகில் ஸகலமான பாபங்களினின்றும் விடுபடுவீர்' என்று ஓர் அசரீரிவாக் உண்டாயிற்று. அதைக் கேட்டு ஸந்துஷ்ட மனஸ்ஸை யுடையவனான த்ரிபுராந் தகனும் வீக்ஷாரண்யத்தை யடைந்தான். மிக வும் ரமணீயமாயும், தேவதைகளால் வணங்கப் படுகிறதாயும் இருக்கிற ஹ்ருத்தாபநாசினியில் நீராடி ப்ரஹ்மஹத்யையிலிருந்து விடுபட்ட ருத்ரனும், மந்மதாகாரனாயும், வேண்டியதெல் லாம் தரும் கற்பகமாயும், நாகபர்யங்கத்தில் கண்வளரா நிற்பவராயுமுள்ள ஸ்ரீராகவனைத் திருவடி தொழுது பரமப்ரீதனானான். அன்று முதல் இந்த க்ஷேத்ரத்தின்பால் உண்டான ப்ரீதியினால் இத்திருக்குளத்தின் வடமேற் குத் துறையில் கோயில்கொண்டு விளங்கிவரு கிறான்.

ப்ரியதர்சிநீ:— மிகவும் ஆச்சர்யாவஹமான வ்ருத்தாந்தம் இப்பொழுது தங்களால் சொல் லப்பட்டது. மிகவும் ஸந்தோஷம். ஆனால் **'पवित्राणां पवित्रं यः'** என்று பரமபாவநனான ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடியினின்றும் உண்டானதாயும், **'तीर्थेन मूर्ध्नि विधृतेन शिवः शिवोऽभूत्'** என்று சிவனுக்கு மங்களத்தையுண் டாக்கினதாயுமிருக்கிற கங்கையை அநாதர ணம் பண்ணி, தன்னுடைய ப்ரஹ்மஹத்யா நிவ்ருத்தியின் பொருட்டு ஹ்ருத்தாபநாசந தீர்த்தத்தைக் குறித்துச் சென்றார் என்பது மிகவும் விசித்ரமாய் இருக்கிறது. தன்கையில் தேனிருக்க, தேனுக்காக மலைக்குப் போனான் என்பதுபோல் அல்லவா இருக்கின்றது.

(தொடரும்)

ஸ்ரீ:

நித்யகர்மாநுஷ்டானங்கள்

நித்யம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டிய க்ரமங்களுடனும் செய்யும் விதங்களுடன் சொல்லுகிற க்ரந்தத்தை நித்யமென்று வ்யவஹரித்துவந்தாலும் ஆஹ்நிகக்ரந்தமென்று சொல்லுகிறார்கள். ஆஹ்நிகமென்றால் அஹ்நி பவம் ஸச்சரித்ரம். அஹ்நி என்பதற்கு பகல் மட்டும் அர்த்தமில்லை. நாள் என்று பொருள் கொள்ளவேணும். இதற்கு ஸ்ரீவைஷ்ணவ ஸதாசாரநிர்ணயமென்றும், ஸச்சரித்ரஸுதாநிதி என்றும் ஸ்பஷ்டமாகவும் பெயர் சொல்லுகிறார்கள். ப்ரமாணம் காட்டவேண்டியதுகளுக்கு ப்ரமாணங்களையும், மந்த்ரத்துடன் செய்யவேண்டியதுகளுக்கு மந்த்ரங்களையும் விவரித்துக் காட்டுகிறது ஆஹ்நிகக்ரந்தம். அப்படிப்பட்ட ஆஹ்நிகக்ரந்தத்தில் ஆசார்யர்கள் அருளிச்செய்யப்பட்ட க்ரந்தத்துக்கு ஏற்றம் உண்டு. ஆகையால் அதையே க்ரந்தசதுஷ்டயம் போல் முதலில் ஆசார்யஸந்நிதியில் காலக்ஷேபம் பண்ணும் வழக்கமும் இருக்கிறது. ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த ஒன்பது க்ரந்தத்தில் ஒன்றான நித்யக்ரந்தத்தில் ஆஹ்நிக க்ரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா விஷயங்களும் க்ரமமாகவும், பூர்ணமாகவுமில்லாதிருப்பதால் அதில் சில பாகம் லுப்தம் என்றும் சொல்லுகிறார்கள்.

மந்த்ரங்களும், தந்த்ரங்களும் உபதேசத்தினால் தெரிந்துகொண்டு ஆவ்ருத்தி செய்து முகஸ்தமாக வைத்துக்கொண்டு அனுஷ்டிக்க வேண்டியவைகள். அந்த கார்யங்களுக்கு ப்ரமாணங்களையும் அதில் எழும் சர்ச்சைகளையும் அதன்மேல் நிர்ணயங்களையும்தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் வித்வான்களுக்கு ஏற்படக்கூடியதானாலும் அவைகளை அனுஷ்டிக்க வேணுமென்று ச்ரத்தையுள்ள யாவருக்கும் ஆசார்யர்கள் அருளிச்செய்தபடியே நாம் செய்துவருவோம் என்கிற உறுதியே போரும். ச்ருதிஸ்ம்ருதிசரணரான நம் முன்னோர்கள் சிறந்தது என்று நமக்கு உபதேசித்ததை நாம் கைப்பற்றி அனுஷ்டிப்பதில் நமக்கு வருவதொரு தப்பில்லையென்றுதான் பெரியோர்களின் வார்த்தை. நாம் நித்யம் செய்யவேண்டிய காரியங்களுக்கு காலத்தை ஐந்து பாகமாகப் பிரித்து வைத்தார்கள். அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்று. அதில் செய்யப்படும் முக்ய காரியங்களையிட்டு அந்த காலத்துக்கு அந்த பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு யாமம் என்பது ஏழரை நாழிகை (மூன்று மணி காலம்) பகல் நான்கு யாமங்கள் ராத்திரி நான்கு யாமங்கள். அதில் ராத்திரி காலத்தில் முதலிலும் பின்னாடியும் உள்ள இரண்டு யாமங்களிலும் காரியங்களை வைத்து நடு இரண்டு யாமம் தூங்கும் காலமாய் வைத்து அதை யோககாலத்தில் அடக்கிவிட்டு ராத்திரியினுடைய கடைசியாமத்தைப்ராஹ்மமுகூர்த்தம் என்று பெயர் கொடுத்து அதிலிருந்தே செய்யவேண்டிய காரியங்களை கணக்கிடுகிறார்கள். அப்பொழுதே விழித்துக்கொள்ள வேணும். அதாவது ராத்திரி மூனுமணிக்கே தூக்கத்தை விட்டுவிடவேணும். ஆஹ்நிகத்தில் சொல்லப்படும் காரியங்கள் ஸ்வஸ்த சரீரமுள்ளவனுக்கு. பொதுவாகவேதான் தர்ம சாஸ்த்ரங்கள் அசக்தன் விஷயத்தில் சக்திக்குத் தக்கபடியென்றுதான் சொல்லுகின்றன. சக்தன் அசக்தனுள்ளவனைக் காட்டிக் கொள்வது முதலியது, ஆத்மவஞ்சனையிலும், ஈச்வரவஞ்சனையிலும் சேரும். அம்மாதிரி விஷயங்களில் பிறரால் ஒன்றும் சொல்லவும், செய்யவும் முடியாது. செய்கிறவனுக்கும் செய்கைக்குப் பலன் கொடுக்கும் ஈச்வரனுக்கும்தான் தெரியும். வஞ்சனையில்லாமல் ருசியுடனும், ச்ரத்தையுடனும் செய்யவேண்டிய காரியங்களுக்கு க்ரமம் மட்டில் ஸங்க்ரஹமாக எழுதுகிறோம்.

மேல் சொல்லப்பட்டபடி பிம்மாலையில் தூக்கதிலிருந்து விழித்துக்கொள்ளவேணும். பக

வானுடைய நாமஸங்கீர்த்தனமும், ஸ்மரணமும் வேதாதிகள் ஓதுகிறவர்கள் அதையும் ஓதவேணும். உஷ:காலத்தில் நதீதடாகாதிகளில் ஸ்நாநம் செய்யவேணும். உலர்ந்த வஸ்த்திரங்களையும், ஊர்த்வபுண்ட்ரங்களையும் தரித்துக்கொண்டு அப்போது குருபரம்பரையையும் அநுஸந்தித்துவிட்டு ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்துவிட்டு, ஔபாஸனம் முதலியதுகளான அக்நியில் செய்யும் காரியங்களையும் செய்துவிட்டு பெரியோர்களையும் பகவானையும் வணங்கவேண்டும். இதுவரையில் அபிகமனம் என்கிற ஒரு காலத்தில் செய்யவேண்டிய காரியம். பிறகு த்ரவ்யங்களையோ, ஜ்ஞானத்தையோ ஸம்பாதிப்பது உபாதானகாலமென்கிற இரண்டாவது காலத்தில் செய்யும் காரியம்.

பிறகு மாத்யாஹ்நிகஸ்நானம் செய்து மாத்யாஹ்நிகம் செய்து பகவதாராதனமும் செய்து வைச்வதேவாதிகளைச் செய்து அந்த அன்னத்தை புஜிப்பது வரையில் மூன்றுவது காலமான இஜ்யையின் காரியம். பிறகு ஸாயங்காலம் ஸந்த்யாவந்தனகாலம் வரையில் வேதசாஸ்திரபுராணாதிகளை பரிசீலிப்பதும், குடும்பகாரியங்களைக் கவனிப்பதும் நான்காவது காலமான ஸ்வாத்யாயகாலத்தில் செய்யும் காரியங்கள். ஸாயம் ஸந்த்யாவந்தனத்தைச் செய்து அக்நியில் செய்யவேண்டிய காரியத்தையும், பகவத்பூஜை நிவேதகம் இவைகளையும் செய்து அந்த அன்னத்தை புஜித்துவிட்டு சாஸ்த்ரமனனம் பண்ணிவிட்டு பகவானை த்யானித்துக்கொண்டு தூங்குதல் ஐந்தாவது காலமான யோககாலத்தில் செய்யும் காரியங்கள்.

இதுதான் தினந்தோறும் செய்யவேண்டிய ஸச்சரித்ரம் தேசிகப்ரபந்தத்தில் ஸ்ரீதேசிகன் ஸ்ரீவைஷ்ணவதிநசரி என்கிற ப்ரபந்தப் பாட்டுக்களால் அவைகளை ஸங்க்ரஹித்து அருளினார்.

ஆகவே எல்லா ஆசார்யர்களும் ஸதாசாரம் அவசியம் அனுஷ்டிக்கப்படவேணுமென்று எண்ணத்தினால் ஸங்க்ரஹமாகவோ, ச்லோகரூபமாகவோ, பாட்டுக்கள் ரூபமாகவோ அருளிச்செய்திருக்கிறார்கள்.

பிம்மாலையில் எழுந்திருக்கும்போது ஹரிர் ஹரி: என்றமாதிரி ஹரிநாமத்தை ஏழுதரம் சொல்லிக்கொண்டே எழுந்திருந்து ஆசமனத்தை முக்யமாகவோ, கௌணமாகவோ செய்துவிட்டு, பெருமாள் கஜேந்த்ரரக்ஷணம் பண்ணின ப்ரகாரத்தை அநுஸந்தானம் செய்து, தன்னுடைய ஹிதத்தைச் சிந்திக்கும்போது நடந்த காலங்களில் தான் ஸரியில்லாததை நினைத்து வருந்தி இனியாவது ஸரியாக இருக்கவேணுமென்று உத்ஸாஹத்தோடு அந்தமாதிரி இருக்கும்படி அனுக்ரஹிக்கவேணும் என்று பெருமாளை ப்ரார்த்தித்துக்கொண்டு பெருமாள் விஷயமான தனக்குத் தெரிந்த ஸ்தோத்ரத்தையோ, அல்லது பெருமாள் நாமங்களையோ அநுஸந்தானம் செய்து வேதம், அருளிச்செயல்கள் இவைகளில் தான் கற்கவேண்டியதையோ, கற்றதுகளையோ தன் சக்திக்கேற்றபடி ஆவ்ருத்தி செய்துவிட்டு, உஷ:காலம் வந்தவாறே நதீதடாகாதிகள் இருக்குமிடம், (அங்கேயே ஜபாதிகள் செய்ய ஸௌகர்யங்களிருக்குமானல் திருப்பக்குடலை, மடிஸஞ்சி முதலியதுகளுடனே) போய் அவைகளைச் சுத்தமான இடத்தில் வைத்துவிட்டு ஜலமலவிஸர்ஜனம் செய்யவேண்டியிருந்தால் அதை செய்துவிட்டு சௌசாதிகளை தன் ஆச்ரமத்திற்கு அனுகுணமாகச் செய்துவிட்டு கண்டூஷம், ஆசமனம் செய்து, பல் தேய்த்துவிட்டு மறுபடி ஆசமனம் செய்து திதிவாரநக்ஷத்திரங்களைச் சொல்லி ஸங்கல்பம் பண்ணிக்கொண்டு, ஸ்நானமந்திரங்களைச் சொல்லி ஸ்நாநம் செய்து ஸ்நாநாங்கதர்ப்பணமும் செய்யவேணும். ஸ்நாநமந்திரங்கள் பூர்ணமாகத் தெரியாவிட்டாலும் திருவஷ்டாக்ஷரத்தையாவது அநுஸந்தித்து கங்கையை த்யானித்துக்கொண்டு ஸ்நாநம் செய்யவேணும். கீழ்ச் சொன்னவைகளுக்கும், மேல் சொல்லப்போகிறதற்கும் ஆஹ்நிகாதிகளில் மந்திரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தெரிந்துகொண்டு அந்தப்படி செய்யவேண்டியது அவசியமானலும் பொதுவாக அவைகளின் முக்யமான க்ரமமும், அதன் நோக்கங்களும் மட்டுமே அதில் ருசி பிறந்து அவைகளை

அப்யஸித்துச் செய்யவேண்டுமென்கிற த்வரை உண்டாகுவதற்காகவே எழுதப்படுகிறது. பிறகு உலர்ந்த வஸ்த்திரங்களை உடுத்திக்கொண்டு கேசவாதிநாமங்களைச் சொல்லி ஊர்த்வபுண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டு ஆசார்யர்களின் தனியன்களை அநுஸந்தித்துவிட்டு ஸந்த்யாவந்தனம் பண்ணி காயத்ரீஜபம் செய்து திருவஷ்டாக்ஷரத்தையும் தத்துல்யமாக ஜபம் செய்து உபஸ்தானம் செய்யவேணும்.

ப்ராஹ்மணனுக்கு (த்ரைவர்ணிகர்களுக்கு என்றுகூடச் சொல்லலாம்) எல்லா ஸம்ஸ்காரங்களும் மந்திரத்துடனேயே நடப்பதால் சௌளம் என்கிற குடுமி வைத்துக்கொள்ளுதல் உபநயனத்திற்கு முந்தின கார்யமாகையால் அந்த குடுமி இல்லாமல் போனால் உபநயநம் ஸித்திக்காது; உபநயநமில்லாமல் போனால் ப்ராஹ்மண்யம் ஏற்படமாட்டாது. ஆகையால் குடுமியஜ்ஞோபவீதம், ஸந்த்யாவந்தனம்ப்ராஹ்மணனுக்கு அவசியம் வேண்டியவைகள். அப்படியே ஸ்ரீவைஷ்ணவனுக்குப் பஞ்சஸம்ஸ்காரம் என்று சொல்லப்படுகிற ஸமாச்ரயணம் அவசியம் வேண்டியவை. இவைகள் ஆசார்யர்களால் செய்யப்படவேண்டியவைகள். விஷ்ணுவைச் சேர்ந்தவன் என்பது வ்யக்தமாகைக்காக பகவானுடைய அங்கசக்ரங்களைத் தாபம் செய்து மந்த்ரபூர்வமாக தரிப்பித்தல் முதல் ஸம்ஸ்காரம். இரண்டாவது, நம்முடைய தேகத்தில் பன்னிரண்டு திருமண்காப்புகளைத் தரிப்பித்தல்; மூன்றாவது தாஸ்யநாமம். நாலாவது மந்திரத்தை உபதேசிப்பது. 5. பகவதாராதனத்தை உபதேசிப்பது இவ்வளவும் செய்தபிறகு இவன் ஸ்ரீவைஷ்ணவனாகிறான். அந்த ஸம்ஸ்காரங்களில் மற்றுள்ள நாலு ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டதை அனுஸரித்து அவை நான்கையும் தினம் தானே செய்துவரவேண்டியது அவசியமாகையால் பன்னிரு நாமங்களையும் தரித்து தாஸ்யநாமத்தையும் அனுஸந்தித்துக்கொண்டு ப்ராஹ்மண்யநிமித்தமாக காயத்ரீஜபம் செய்வதுபோல் ஸ்ரீவைஷ்ணவநிமித்தமாக திருவஷ்டாக்ஷரஜபத்தையும் அப்போதே செய்துவிட்டு உபஸ்தானத்திற்குப் பிறகு அஷ்டாக்ஷரத்தையும் மீதி உபதிஷ்டமந்திரங்களை ஜபம் செய்யவேணும். பிறகு ஆதாரசக்த்யாதி தர்ப்பணம், தேவர்ஷி காண்டர்ஷி பித்ருதர்ப்பணம், ப்ரஹ்மயஜ்ஞம் இவைகளை முடித்துக்கொண்டு, பெரியவர்களை வணங்கிவிட்டு க்ருஹத்திற்கு வந்து அக்நியாதி கார்யங்களைச் செய்து பெருமாளையும் யதாசக்தி ஆராதிக்கவேணும். இதுவரையில் அபிகமனம். பிறகு உபாதாநாதிகாலங்களில் செய்யவேண்டியதைச் செய்யவேணும்.

ஆனால் இக்காலத்தில் அநேகமாக எல்லோரும் இருந்து பத்து மணிக்கு மேல் போகாமலேயே அதற்குள்ளாகவே தங்கள் ஜீவனோபாயத்துக்குப் போகவேண்டிய நிலைமையிலிருக்கிறபடியால் அவர்களுக்கு ஆஹ்நிககார்யங்கள் எப்படி பொருந்தக் கூடும் என்கிற சங்கை உதிக்கக் கூடும். அது நியாயமான சங்கையே. அதற்கு ஸமாதானம் சொல்லுகிறோம்.

ப்ராஹ்மணனுக்கு ஸேவாவ்ருத்தி முதலியது ஆபத்வ்ருத்தியாகையால் அந்த வ்ருத்தியுள்ளவர்களுக்கு எல்லாவற்றையும் எக்காலத்திலும் முழுவதும் அனுஷ்டிக்கமுடியவில்லையே என்கிற காரணத்தினால் எல்லாவற்றையுமே முழுவதுமே விட்டுவிடக்கூடாது. முடிந்த காலத்தில் முடிந்த அளவு அவசியம் அனுஷ்டிக்கவேண்டுமென்பதுதான் பெரியோர்களின் வார்த்தை. க்ஷத்ரியவ்ருத்தியை அவலம்பித்த துராணாச்சாரியருடைய கதையை கவனிக்கவேணும். முக்யமாக ஸ்ரீகீதையில் எம்பெருமான் தான் சொன்ன அர்த்தத்தில் முதலில் அஸூயை (அதாவது நல்ல குணமுள்ள விஷயத்தில் தோஷாரோபணம் பண்ணுவது) இல்லாமலிருக்கவேணும். அப்படியிருந்தால் அது காலக்ரமத்தில் அதில் ச்ரத்தையுண்டாகும். அதன்பேரில் அதை அனுஷ்டிக்கவும் முற்படுவன். நித்யமாகவும் அனுஷ்டிப்பன். ஸமஸ்த பாபங்களும் போகும் என்று அருளிச்செய்தபடி ஆஹ்நிககார்யங்களிலும் அதை அனுஷ்டிக்கிறவர்களிடமும் அஸூயையில்லாமலிருந்தாலேயே தன்னடைவே ச்ரத்தை முதலியதுகள் ஸம்பவிக்கும். இந்த க்ரமத்தில் தன்னால்

முடிந்த அளவு முடிந்த காலத்தில் முடிந்ததைச் செய்யலாம். இதுவரை சொன்ன அபிகமன க்ருத்யங்கள் அநேகமாக எல்லோராலும் எப்பொழுதும் அனுஷ்டிக்கக் கூடியவைகளே. சுருங்கச் சொல்லில் பிம்மாலே எழுந்திருந்து பல் தேய்த்து ஸ்நாநம் செய்து பன்னிரு திருநாமம் தரித்து ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்து பெரியோர்களையும் பகவானையும் வணங்குவது முடியாத காரியமில்லை. குறைந்தபக்ஷம் தூங்கி எழுந்ததிலிருந்து ஒரு மணிக்குள் கட்டாயம் இவைகள் செய்து முடிக்கக் கூடியவைகளே. அவைகளை முடித்துக்கொண்டு தன் வ்ருத்தி ஸம்பந்தப்பட்ட காரியங்களை என் கவனிக்க முடியாது. வக்கீல் தொழிலிலிருப்பவர்கள் அந்த ஒரு மணிக்குப் பிறகு கக்ஷிக்காரர்களிடம் பேசக்கூடாதா? வியாபாரம் செய்கிறவர்களும் பிறகு செய்யக்கூடாதா? இம்மாதிரியே எல்லாத் தொழிலிலுள்ளவர்களும் செய்யலாம். முன் சொன்ன மாதிரி இதில் அருசியை ஏற்படாமலிருந்தாலேயே ரொம்ப சீக்கிரத்தில் ச்ரத்தை ஏற்பட்டு அனுஷ்டிக்கவும் முற்படுவார்கள். கண்ணன் ஸ்ரீகீதையில் சொன்ன வார்த்தை ஒருநாளும் பொய்யாகாது. ஆகவே தன்னுடைய வேலை நாட்களில் அபிகமனம் வரை யதாகாலத்தில் செய்துவிட்டு மேல்செய்யவேண்டியதை தான் வேலைக்குப் போகவேண்டிய காலத்துக்குத் தக்கபடி முன்னதாகச் செய்துவிட்டு ஸ்வாத்யாயகாலத்தில் செய்ய வேண்டியதைச் செய்வதான எண்ணத்துடன் தன் வ்ருத்தியில் ஈடுபட்டுவிட்டு மறுபடி திரும்பி வந்ததும் அந்த காலத்துக்குரியதை அதுமுதல் செய்வது கௌணானுஷ்டானமாயிருந்தாலும் சாஸ்த்ரம் சொன்னபடி செய்தானாகவே அவனைக் கருதலாம். வேலையில்லாத சனி, ஞாயிறு முதலான ஓய்வு நாளில் முக்யானுஷ்டானமும் செய்துவரலாம். ஆகையால் எல்லோராலும் எப்போதும் செய்யவேண்டியதும் செய்யக் கூடியதுமான முக்யமான காரியமாகையால் அபிகமனகாலத்தில் செய்ய வேண்டியதை வற்புறுத்திச் சொன்னோம்.

ஒரு குடும்பத்தில் ஒருவன் ஸதாசாரயுக்தனாயில்லாது துராசாரனாகஆகிவிட்டால் அவன் கெட்டுப் போனதுமல்லாமல் அவனிடமிருந்து ச்ராத்தாதிகளை எதிர்பார்க்கும் (பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹர்கள்) தகப்பன், பாட்டன், கொள்ளுப் பாட்டன் இவர்களுக்குக்கூட இழுக்கு சேற்படுகிறது. இவனால் செய்யும் கிரியைகளை அவர்கள் உகப்பதில்லை. தானாவது தன் தகப்பன் ஸதாசாரத்தில் ருசியுள்ளவனாக இருந்த காரணத்தால் கொஞ்சநாள் ஸதாசாரத்தில் இருந்திருக்கக் கூடும். அப்படிக்கில்லாமலிவனிருப்பதால் இவனுடைய துராசாரம் பிறவி முதலிலேயே இவன் ஸந்ததிக்குப் பரவி விடுகிறது. அத்துடன் நெடுநாளாகப் பரவிவந்த ஸதாசாரத்துக்கும் நம் மதத்திற்கும் இவன் அழிப்பாளனாக ஆகிவிடுகிறான். ஆக தான் கெட்டு தன் முன்னோர்களையும் பின்னோர்களையும் மதத்தையும் கெடுத்துவிடுகிறான். உபநிஷத்தில் ஆசார்யன் சிஷ்யனை அனுசாஸிக்கும்போது அநவத்யமான கர்மங்களை அவசியம் செய்யவேண்டுமென்றுசொல்லுவதாகச்சொல்லியிருக்கிறது. அதற்கவசியமவன்சொல்லவேண்டும் என்று விதியில்கூட தாத்பர்யம். தவிர தன்னை ப்ராஹ்மணன், ஸ்ரீவைஷ்ணவன் என்று சொல்லிக்கொள்ள ஆசையிருந்தால் மேல் கண்ட காரியங்களைச் செய்துவந்தால் தன்னுடைய மனதிற்கே தான் பிராஹ்மணன் வைஷ்ணவன் என்று சொல்லிக்கொள்வதற்கு ஒத்து நடந்துவருகிறோம் என்ற திருப்தி ஏற்படும். நம் ஆசாரத்தின் பெருமை பிறருக்கு நம்மை ஒளிக்காமல் பிரகாசிக்கும்படிக் காட்டிக்கொள் வதே நோக்கமுள்ளதாகவிருக்கிறது. பொருள் தேடுவதற்காக நம்மை நாம் மறைத்துக்கொண்டோமாகில் நாம் திருடராகவும் திருட்டுத் தொழில் செய்கிறவர்களாகுமே ஆய்விடும். குடுமி வைத்துக்கொள்வதால் நாம் புனிதமான பாரததேசத்தினர் என்பதையும் திலகம் முதலியதுகளை அணிவதால் இந்த வர்ணத்தினர் என்றும், உடையணியும் ப்ரகாரத்தால் இன்ன ஆச்ரமத்தான் என்றும் நாம் காட்டிக் கொடுக்கிறோம். இப்படி நாம் பெருமைப் பட்டுக்கொள்ளவேண்டிய ஆசாரத்தை அனுஷ்டிப்பது நமக்குக் குறைவைக் கொடுக்குமென்று எண்ணுவது ரொம்பப் பேதமையே. ஆகை

யால் நம்முடைய பூர்வர்களின் ஆசாரத்தை நம்மால் முடிந்த அளவு ஆத்மவஞ்சனை பண்ணாமல் செய்யவேண்டியது அவசியம்.

ஸ்ரீவைஷ்ணவன் என்றால் விஷ்ணுதாஸனென்று அர்த்தமாகையால் தாஸனுக்கு ஸ்வாமியின் ஸேவை முக்யமாகையால் அஹோராத்ர க்ருத்யத்தில் பகவதாராதனம் முக்யமாகையால் அதை அவசியம் செய்யவேண்டும். பஞ்ச ஸம்ஸ்காரத்தில் ஐந்தாவது ஸம்ஸ்காரமாக உபதேசிக்கப்பட்டபடியால் அதை விஸ்தாரமாக ஆஹ்நிகத்தில் சொல்லியபடி செய்ய அவகாசாதிகள் இல்லாமல் போனாலும் காலத்திற்கேற்ப மூலமந்த்ராதிகளைக் கொண்டாவது செய்து முடிக்கலாம். அவகாசம் உள்ளபோது அதற்குத் தக்கபடி விஸ்தாரமாயும் செய்யலாம்.

இப்படியாக நாம் எம்பெருமானின் அடிமையென்றும் அவனால் விதிக்கப்பட்ட சாஸ்த்ரானுஷ்டானம் பண்ணுவது அவனுக்கு ப்ரீதியை விளைவிக்கும். (அதனாலேயே ஸ்ரீபகவதாஜ்ஞயா ஸ்ரீமந்நாராயணப்ரீத்யர்த்தம்என்று ஒவ்வொன்றுக்கும் ஸங்கல்பம் செய்துகொள்ளப்படுகிறது) என்கிற எண்ணத்தினால் தன் வர்ணாச்ரமத்திற்கு ஏற்பட்ட கர்மங்களை விடாமல் யதாசக்தி அனுஷ்டித்து வந்தால் இங்கேயும் பெருமையுடன் வாழ்ந்து மோக்ஷோபாயாதிகளையும் அனுஷ்டித்து முக்தாநந்தத்தையும் அனுபவிக்கும்படியான நன்மைகள் உண்டாகும்.

ஸர்வாகமாநாமாசார: ப்ரதம: பரிகல்பதே ஆசாரப்ரபவோ தர்ம: தர்மஸ்ய ப்ரபுரச்யுத: ॥

(ஸர்வாகமங்களுக்கும் ஆசாரம்தான் முக்யமானது. அதில் ஸதாசாரம் உயர்ந்தது. அதனால்தான் தர்மம் உண்டாகிறது. அந்த தர்மத்துக்குத்தான் (ஈச்வரன்) அச்யுதன் பலமளிக்கிறான்' என்று ஆசாரத்தின் மஹிமையை உணரவேண்டியே இதை ஸஹஸ்ரநாமபாராயணங்களில் சேர்த்து அனுஸந்திக்கிறார்கள்.

க்ருஹஸ்தாச்ரமம் எல்லா ஆச்ரமத்தினாலும் உபஜீவிக்கப்படுவதால் க்ருஹஸ்தாச்ரமத்தின் தர்மங்கள்தான் முதலில் ஆஹ்நிகாதிகளில் சொல்லப்பட்டதாலும் பிறகு மற்ற ஆச்ரமங்களின் தர்மங்களும், அநுபநீதர்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் செய்யவேண்டிய தர்மமும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் ஸ்த்ரீதர்மமும் அநுபநீததர்மமும் தகப்பனாலும், பர்த்தாவினாலும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அனுஷ்டிக்கும்படிச் செய்யவேண்டியவைகள். வயது வந்து புத்தியுள்ளவர்கள் தாங்களாகவும் தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கலாம். முக்யமாக ஸ்த்ரீகளுடைய பராமரிப்பினால் தான் ஆண் பெண் குழந்தைகளுக்கு குணங்கள் ஏற்படுவதால் அநேகமாக ஐந்து வயது வரையில் தாயுடனேயே குழந்தைகள் பழகி வருவதால் தாய்மார்களும் குழந்தைகளைப் போஷிக்கும் மற்றஸ்த்ரீகளும் கவனிக்கவேண்டியதைமட்டில் குறிப்பிடுகிறோம்.

ஸதாசாரத்தில் ச்ரத்தையுள்ள ஸ்த்ரீசுமங்கலிகள் ப்ரதிதினம் சிரஸ்நானம் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. (இதனால் புருஷனுக்கு இது அவசியம் என்றே ஏற்படுகிறது) விசேஷ தினங்களில் சிரஸ்நானம் செய்துகொண்டு மற்ற தினங்களில் மஞ்சள் நீரால் (தீர்த்தத்தால்) சிரஸ்ஸில் ஹரி ஹரி என்று ப்ரோக்ஷித்துக்கொண்டு கண்டஸ்நானம் செய்து அர்த்தசந்த்ராகாரமாகத் திருமணையும், ஸ்ரீசூர்ணத்தை தீபரேகாகாரமாயும் இட்டுக்கொண்டு தனியனை அனுஸந்தித்துவிட்டு ஸமாச்ரயணகாலத்தில் தனக்கு உபதிஷ்டமான மந்த்ரங்களை பத்து ஆவ்ருத்தி ஜபித்து மாமனார், மாமியார் முதலிய பெரியவர்களை வணங்கிவிட்டு, பெருமாள் ஸந்நிதியையும், பெருமாள் படங்கள் உள்ள இடத்தையும் மெழுகி, கோலம் முதலியதுகளால் அலங்கரித்து வணங்கி தன்னுடைய குழந்தைகளுக்கு பல் தேய்த்துப் ஸ்நாநம் செய்வித்து நல்ல துணியை உடுத்தி திருமண் இட்டு பெருமாளை ஸேவிக்கச்சொல்லி என்னைக் காப்பாற்ற வேணும் என்று சொல்லச்சொல்லவேணும். இம்மாதிரி பழக்கினால் தெய்வபக்தியும், ஸதாசாருசியும் அவர்களுக்கு அபிவ்ருத்தியாகும். புருஷக்குழந்தைகளுக்கு ஒருநாளும் கிராப் வைக்கக் கூடாது. வைத்துக்கொள்ள இடம்

கொடுக்கக்கூடாது. அம்மாதிரி பெண் குழந்தைகளுக்கு இரட்டைப் பின்னல், கோணவகுடு இதற்கும் இடம் கொடுக்கக் கூடாது. பழைமையான உடையையே அணியும்படிச் செய்யவேணும். கல்யாணமான பெண்கள் வீட்டு விலக்குக்காலம் தவிர மற்ற நாளில் முன்னோர் வழக்கப்படி வலமேலாக்கோ, இடமேலாக்கோ அணிந்துகொண்டு கச்சத்துடன் (மடிஸார் என்று வழங்கும்) இருக்கவேணும். கோசாணங்கள் உடுத்திக்கொள்ளக் கூடாது. இந்த மாதிரி தானும் ஸதாசாரத்துடன் இருந்து தன் குழந்தைகளையும் நல்ல பழக்கத்துடன் கொண்டுவந்தால் தனக்கும், தன்குடும்பத்துக்கும், தான் பெற்ற குழந்தைகளுக்கும் பர்த்தாவுக்கும் நன்மையை செய்தவளாகுவதோடு தர்மத்தையும் வளர்த்தவளாகவும் ஆவாள். ஸ்த்ரீகள் கெட்டுவிட்டால் தடுக்க முடியாதபடி அதர்மம் வளர்ந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஸ்த்ரீகள் அவசியம் ஸதாசாரத்துடன் இருக்கவேண்டும்.

ஸ்ரீ அழகியசிங்கரால் அவ்வப்போது மந்த்ராத்யுபதேசகாலத்திலும் தனிப்பட்டவர்களுக்கு ஹிதம் சொல்லும்போதும் விஸ்தாரமாக ஸாதிக்கப்பட்ட விஷயங்களை ஸங்கீபூதர்களுக்கு விஷயத்தின் சீர்மையையும் அவச்யத்தையும் உத்தேசித்து வெளியிடவேண்டுமென்கிற அபிஸந்தியில் சுருக்கமாக வெளியிடப்பட்டது.

ஸ்ரீ:

செய்தி

து. க. ஜ. ஷஷ்ட்யப்தபூர்த்தி விழாக்கமிட்டி,

4. V. S. முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15.

"தார்மிக ஹிந்து" பத்ரிகையின் ஆசிரியர் ஸ்ரீ. உப. து. க. ஜகன்னாதாசார்யர் நமது ஸமூஹத்திற்கு சென்ற 30 ஆண்டுகளாக செய்து வரும் ஸேவையைப் பாராட்டவும், அந்த ஸ்வாமியின் 60-வது ஆண்டு விழாவை வெகு சிறப்பாக நடத்தி அதுஸமயம் ஒரு நிதி திரட்டி அவருக்கு அளிப்பதற்காகவும் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த சென்னையிலும், வெளியூர்களிலுமுள்ள பல ப்ரபலஸ்தர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

இந்த விழாவுக்கு ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதிபிருதாலங்க்ருத (ஸ்ரீ அஹோபிலமடம்) ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹமும், ஸ்ரீசங்கராசார்யர் முதலிய இதர மடாதிபதிகளினுடையவும் ஆசியும் ஏற்பட்டு, ஸ்ரீமுகங்கள் அநுக்ரஹிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திகர்கள் எல்லோரும் இதில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும் என்பது சொல்லத் தேவையில்லை. நன்கொடையை விழாக்கமிட்டி பொக்கிஷதார் ஸ்ரீ. உப. D. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, நெ. 8. தெற்கு மாடவீதி, மைலாபூர், சென்னை-4 என்ற விலாஸத்துக்கு அனுப்பவேணுமாய்ப் பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

து. க. ஜ. ஷஷ்ட்யப்தபூர்த்தி விழாக் கமிட்டியார்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

[ஹேமலம்பி வூ தக்ஷிணாயநம் - வர்ஷ ருது, கந்யாமீ 1957 வூ செப்டம்பர் - அக்டோபர்]

17-9-57 புரட்டாசிமீ 1வ செவ்வாய்க்கிழமை சூன்ய திதி, மத்யாஷ்டமி வ்யதீபாதம்

18-9-57	2வ	புதன்கிழமை	நவமி, தசமி திதித்வயம்.
19-9-57	3வ	வியாழக்கிழமை	ஏகாதசி திதி.
20-9-57	4வ	வெள்ளிக்கிழமை	ஏகாதசி வ்ரதம், ஸந்யஸ்தமஹாளயம்.
21-9-57	5வ	சனிக்கிழமை	ஆயில்யம், 18-வது பட்டம் ஸ்ரீமந்நாராயண யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
22-9-57	6வ	ஞாயிற்றுக்கிழமை	சஸ்த்ரஹதமஹாளயம், பூரம், 12-வது பட்டம் ஸ்ரீமந்நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
23-9-57	7வ	திங்கட்கிழமை	● மஹாளய அமாவாஸ்யை,
24-9-57	8வ	செவ்வாய்க்கிழமை	நவராத்ரி ஆரம்பம்.
27-9-57	11வ	வெள்ளிக்கிழமை	விசாகம், 33-வது பட்டம் ஸ்ரீசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
29-9-57	13வ	ஞாயிற்றுக்கிழமை	திருக்கேட்டை, ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
30-9-57	14வ	திங்கட்கிழமை	மூலம், 20-வது பட்டம் ஸ்ரீ வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
2-10-57	16வ	புதன்கிழமை	மஹாநவமி
3-10-57	17வ	வியாழக்கிழமை	திருவோணம், ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் திருநக்ஷத்ரம். விஜயதசமி.
4-10-57	18வ	வெள்ளிக்கிழமை	ஏகாதசி.
6-10-57	20வ	ஞாயிற்றுக்கிழமை	சதயம், 17-வது பட்டம் ஸ்ரீவீரராகவவேதாந்த யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
8-10-57	22வ	செவ்வாய்க்கிழமை	○ பூர்ணிமை.
16-10-57	30வ	புதன் கிழமை	கன்யாக்ருஷ்ண அஷ்டமி திதி.

[தக்ஷிணாயநம் - சரத்ருது - துலா மீ]

17-10-57 ஐப்பசி மீ 1வ வியாழக்கிழமை துலாரவி, 9-37, துலா, விஷு ஸங்க்ரமண தர்ப்பணம். சூன்யதிதி.

19-10-57	3வ	சனிக்கிழமை	ஏகாதசி.
21-10-57	5வ	திங்கட்கிழமை	த்ரயோதசி, சதுர்தசி திதித்வயம், ராத்திரி நரகசதுர்தசி ஸ்நாநம்.
22-10-57	6வ	செவ்வாய்க்கிழமை	● அமாவாஸ்யை. தீபாவளீ.
27-10-57	11வ	ஞாயிற்றுக்கிழமை	மூலம், 11-வது பட்டம் ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
29-10-57	13வ	செவ்வாய்க்கிழமை	பூராடம், ஸேனைமுதலியார் திருநக்ஷத்ரம்.
31-10-57	15வ	வியாழக்கிழமை	திருவோணம், பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்.

Regd. No. M. 4437.

போன் நெ. 112.
காஞ்சிபுரத்தில் கலியாண பட்டு ஜவுளிகள்
வாங்க நம்பிக்கையான இடம்
புதிய ஜவுளிக்கடை

***

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் & சன்,
184. காந்தி ரோடு, காஞ்சிபுரம்.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு,
மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்டரி.